பாய் இருக்கிறது. விலைமாதர்கள், ஆயக்காரர்கள் ஆகியோரின் போக்கு இளைய மகன் நடத்தைக்கு ஒப்பாய் இருக்கிறது. இறைவனுடைய வாக்கை நீங்கள் மதிக்கிறீர்கள். ஆனால் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவில்லை; ஆனால் ஆயக்காரர்களும் விலைமாதர்களுமோ இறைவனுடைய வாக்கை முதலில் ஏற்கவில்லை. ஆனால், இறுதியில் ஏற்றுக் கடைப்பிடிக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குத்தான் வான் உலகப் பேறு எளிதில் கிட்டும்'' என்று இயேசுநாதர் விளக்கிச் சொன்னார்.

பிறகு, வேறு ஒரு துறையில் இயேசுநாதரைச் சிக்க வைக்கப் பரிசேயர்கள் முயன்றார்கள். அரசியல் சம்பந்தமாக, சிக்கலான ஒரு கேள்வியைக கேட்டு, அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகும்படி செய்துவிட்டால், இயேசுநாதரைத் தக்கபடி அதிகாரிகள் தண்டிப்பார்கள் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆகவே அதிகாரிகள் சிலரை அழைத்துக் கொண்டு, குருமார்கள் இயேசுநாதரிடம் வந்தார்கள்.

முன்பு கேள்வி கேட்டவர்களுக்கும் தங்களுக்கும் இடையில் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்பதுபோல் பாவனை செய்துவிட்டு, இயேசுநாதரை நோக்கி மரியாதையுடன், ''பெருமானே! தாங்கள் உண்மை நெறியில் நடப்பவர்; இறைவனுடைய நெறியை மக்களிடையே போதனைசெய்து பரப்பி வருபவர்; மனிதனுக்குப் பயந்து எந்தக் காரியத்தையும் தாங்கள் செய்வது பழக்கம் இல்லை. ஓர் உண்மை பற்றி உங்களிடம் நாங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ளப் பிரியப்படுகிறோம். சீசர் சக்கரவர்த்திக்கு நாம் வரி கொடுப்பது, இறைவனுடைய சட்டத்துக்கு உட்பட்டதா? அல்லது மாறுபட்டதா?'' என்று கேட்டார்கள்.

''வரி கொடுக்க வேண்டும்'' என்று இயேசுநாதர் பதில் சொன்னால், பொது மக்கள் கோபப்படுவார்கள். ''வேண்டாம்'' என்று பதில் சொன்னால் அதிகாரிகள் கோபப்படுவார்கள். இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுத் திக்குமுக்காடச் செய்துவிட்டால், இயேசுநாதர் தப்ப முடியாது என்ற எண்ணத்தில்தான், இரண்டாம் முறை வந்தவர்கள், இயேசு

நாதரிடம் இப்படி அரசியல் சம்பந்தமான ஒரு கேள்வி கேட்டார்கள்.

கேள்வி கேட்டவர்களின் கபட எண்ணத்தை இயேசு நாதர் தெரிந்துகொண்டார். ஆகவே, அவர்களைப் பார்த்து, ''தீயவர்களே! என்னையா நீங்கள் சோதிக்க எண்ணு கிறீர்கள்? நீங்கள் வரிப் பணம் செலுத்தும் நாணயத்தை எனக்குக் காண்பியுங்கள்; பார்க்கலாம்'' என்று சொன்னார்.

உடனே அவர்கள் வெள்ளித் தெனியர் நாணயம் ஒன்றை எடுத்து வந்து இயேசுநாதரிடம் காட்டினார்கள்.

அதைப் பார்த்த இயேசுநாதர் அவர்களிடம், ''இந்த நாணயத்தில் இருக்கும் உருவமும் எழுத்தும் யாருடை யவை?'' என்று கேட்டார்.

''சீசருடையவை'' என்று அவர்கள் பதில் சொன் னார்கள்.

இந்தப் பதிலைக் கேட்டதும் இயேசுநாதர் அவர்களிடம் ''சீசருக்கு உரியவற்றைச் சீசரிடம் கொடுங்கள். இறை வனுக்கு உரியவற்றை இறைவனிடம் செலுத்துங்கள்'' என்று பதில் சொன்னார்.

இவ்வாறு பதில் சொன்னதும், பரிசேயர்களும் அதிகாரி களும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார்கள். மேலும் கேள்வி கள் கேட்பதை நிறுத்திவிட்டு, வந்த வழியே திரும்பினார்கள்.

ஆச்சரியமும் ஆத்திரமும்

வாக்குவாதத்துக்கு இழுத்து, அவர் வாய்மொழி மூலமே, அவர் சட்டத்துக்கு விரோதமானவர், சம்பிர தாயத்துக்கு விரோதமானவர், அதிகாரிகளுக்கு விரோத மானவர் என்பதை நிரூபிக்கப் பரிசேயரும் சதுசேயரும் இடைவிடாது முயன்றுவந்தனர். எப்படியாவது ஒரு சிக்கலில் இயேசுநாதரை மாட்டிவைத்துத் தக்கபடி தண்டிக்க ஏற் பாடு செய்துகொண் டிருந்தனர்.

செவ்வாய்க்கிழமை யன்று, பரிசேயர்கள் வாக்குவாதம்

செய்து திரும்பிய பிறகு, சதுசேயர் என்னும் பிரிவினர், இயேசுநாதரோடு வாக்குவாதம் செய்ய வந்தார்கள். இவர்கள் பரிசேயர்களுடன் நேசமாய் இருக்கவில்லை. அதற்காக இயேசுநாதரை இவர்கள் ஆதரிக்கவில்லை. இவர்களும் இயேசுநாதரை எதிர்த்தார்கள்.

பரிசேயர்கள் திரும்பிய பின்பு, சதுசேயர்கள் இயேசுநாதரிடம் வந்து சட்ட சம்பந்தமான ஒரு கேள்வியைக் கேட்டார்கள்.

யூதர்களிடையே ஒரு சட்டம் நடைமுறையில் இருந்து வந்தது. ஒரு யூதன் சந்ததி யின்றி இறந்து போனால், இறந்த யூதனின மனைவியை, அவன் சகோதரன் மணந்து கொண்டு, சந்ததியை உண்டுபண்ண வேண்டும் என்று விதி இருந்தது. இந்த விதியில் ஒரு சிக்கலைப் புகுத்தி, இயேசுநாதரிடம் ஒரு கேள்வியைச் சதுசேயர்கள் கேட்டார்கள்.

''ஒரு ஊரில் சகோதரர்கள் ஏழு பேர் இருந்தார்கள்; அவர்களில் மூத்தவன் சந்ததி இன்றி இறந்து போனான். அவன் மனைவியை இரண்டாமவன் திருமணம் செய்துகொண்டான். அவனும் அவளிடம் சந்ததியை உண்டுபண்ணாமல் இறந்து போனான். இப்படி ஆறு சகோதரர்களை அந்தப் பெண் திருமணம் செய்துகொண்டாள். குழந்தை பிறக்கவில்லை; கடைசியாக ஏழாவது சகோதரன் அவளைத் திருமணம் செய்துகொண்டான். அவனும் அவளிடம் சந்ததியை உண்டு பண்ணாமலே இறந்து போனான். கடைசியில் அந்தப் பெண்ணும் இறந்து போனாள். உயிர்த்தெழும் காலத்தில் இந்தப் பெண் யாருக்கு மனைவியாய் இருக்க உரியவள்? ஏழு கணவன்மார்களுக்கும் சம பாத்தியதை உண்டல்லவா?'' என்று கேட்டார்கள்.

சதுசேயர்கள் வேண்டும் என்றே குறும்புத்தனமாகக் கேட்ட இந்தக் கேள்விக்கு, பதிலே சொல்லாமல் இயேசுநாதர் தட்டிக் கழித்து இருக்கலாம். ஆனால், இயேசுநாதர் அவ்வாறு செய்யவில்லை. பொறுமையுடன் அவர்களுக்கு அவர் பதில் சொன்னார்.

உயிர்த்து எழுதல் என்னும் கோட்பாட்டைக் கண்டனம் செய்யும் நோக்கத்துடன்தான் சதுசேயர்கள் இந்தக் கேள்வியை இயேசுநாதரிடம் கேட்டார்கள்.

இதற்கு இயேசுநாதர், "மறை நூல் கூறுவதையும் தெரிந்துகொள்ளாது, இறைவனுடைய ஆற்றலையும் தெரிந்துகொள்ளாது, நீங்கள் தவறு செய்கிறீர்கள். உயிர்த்தெழும் காலத்தில் யாரும் திருமணம் செய்துகொள்வதும் இல்லை. திருமணம் செய்து கொடுப்பதும் இல்லை. வான் உலகில் அவர்கள் இறைவனுடைய தூதர்போல் விளங்குவார்கள்" என்று பதில சொன்னார்.

இயேசுநாதர் இவ்வாறு பதில் சொன்னதும் சதுசேயர்கள் வாயடைத்துப் போனார்கள். மேலும் கேள்வி கேட்க விரும்பாது, சும்மா இருந்தார்கள். மற்றவர்களும் கேள்விகள் கேட்பதை அத்துடன் நிறுத்திக்கொண்டார்கள்.

தாங்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் இயேசுநாதர் சாதுரியமாகப் பதில் சொன்னதைக் கேட்டு, முதலில் சதுசேயர்களும் பரிசேயர்களும் ஆச்சரியம் அடைந்தார்கள். பிறகு ஆத்திரமடைந்தார்கள். ஏனெனில் மக்களிடையே தங்களுக்கு இருக்கும் மதிப்புக் குறைந்து போவதை யார்தான் விரும்புவார்கள்?

விதவையின் காணிக்கை

பரிசேயரும் சதுசேயரும் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னதோடு மட்டும் இயேசுநாதர் நிற்கவில்லை. சந்தர்ப்பம் வாய்க்கும்போது, அவர்களைக் கடிந்தும் உரைத்தார். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் அவர்களுடைய போக்கையும், சொல்லும் செயலும் ஒத்திராத அவர்களின் கயமைக் குணத்தையும், அவர் வன்மையாகக் கண்டித்தார்.

தம்மை எதிர்க்கிறார்கள் என்பதற்காக, பரிசேயரையும் சதுசேயரையும் இயேசுநாதர் கண்டிக்கவில்லை. இயேசுநாதர் யாரையும் எதிரியாகக் கருதுவது இல்லை. பல முறையும் போதனைகளைக் கேட்டும், தாம் கூறும் விளக்கங்களை

செவிமடுத்தும், தாம் செய்த புதுமைகளை நேரில் பார்த்தும் கூடத் திருந்தாமல் வீம்புசெய்யும் மனப்பான்மையோடு அவர்கள் பிடிவாதம் செய்வது, இயேசுநாதருக்குப் பிடிக்க வில்லை. பகட்டிலும் படாடோபத்திலும், அதிகார வெறி யிலும் ஈடுபாடு இருந்ததே யன்றி, உண்மையிலும் நேர்மை யிலும் தியாகத்திலும் பரிசேயர்களுக்கு ஈடுபாடு இல்லை.

அதனால்தான் இயேசுநாதர் பரிசேயர்களைக் கண்டிக்கத் தொடங்கினார்; கடுமையான சொற்களைப் பயன்படுத்தி, இயேசுநாதர் அவர்களைக் கண்டித்து இருக்கிறார். அது வருமாறு:

''பரிசேயர்களும் சதுசேயர்களும், மோசஸ் இருந்த பீடத் தில் வீற்றிருக்கிறார்கள். அவர்கள் கட்டளையிடுவதையும் சொல்லுவதையும், நீங்கள் செய்யுங்கள். ஆனால் அவர்கள் செய்வதைப் பின்பற்றி நீங்கள் செயலில் இறங்க வேண் டாம். ஏனெனில் அவர்களின் பேச்சும் செயலும் வெவ்வேறாய் இருக்கின்றன. திணறவைக்கும் பாரமான சுமைகளை மற்ற வர்களின் தோள்கள்மீது அவர்கள் சுமத்துகிறார்கள். ஆனால் அந்தச் சுமையை இறக்க, தங்கள் ஒரு விரலைக்கூட அவர்கள் அசைப்பது இல்லை. மற்ற மக்கள் பார்வையில் பட வேண்டும் என்பதற்காக, அவர்கள் ஏதோ காரியங்கள் செய்கிறார்கள். அவற்றில் பகட்டும் படாடோபமும் மிகுதியாக இருப்பதை நீங்கள் காணலாம். விருந்துகளில் அவர்களுக்கு முதல் பந்தியில் இடம் கொடுக்க வேண்டும், சபைகளில் முன் வரிசையில் உட்கார வேண்டும்; சந்திக்கும்போது மரியாதை செலுத்த வேண்டும். 'ரபியே!' என்று மரியாதையுடன் அழைக்க வேண்டும்.''

இப்படிப் பொதுப்படையாக முதலில் பரிசேயர்களையும் சதுசேயர்களையும் பற்றி, பொது மக்களுக்குத் தம் கருத்துக் களை வெளியிடும் தோரணையில் இயேசுநாதர் பேசினார். அதன் பின்னர் நேரடியாகவே பரிசேயர்களையும் சதுசேயர் களையும் தாக்கிப் பேசினார்.

''பரிசேயரே! உங்களுக்குக் கேடு! ஏனெனில் சொர்க்கத் தில் நுழையவிடாதபடி மக்களை நீங்கள் தடைப்படுத்து

கிறீர்கள். நீங்களும் சொர்க்கத்தில் நுழைய மாட்டீர்கள். பிறரையும் நுழையவிட மாட்டீர்கள்.

''பரிசேயரே! உங்களுக்குத் துன்பம்! கோப்பையை நீங்கள் வெளியே சுத்தப்படுத்தி அலம்புகிறீர்கள்; ஆனால் உள்ளே திருட்டுத்தனமும் அசுத்தமும் நிறைய இருக்கின்றன. குருட்டுப் பரிசேயர்களே! முதலில் கோப்பைக்குள் இருப்பதை அலம்பிச் சுத்தம் செய்யுங்கள். அதனால் வெளிப்புறமும் சுத்தமாய்விடும்''

இவ்வாறு கண்டித்துப் பேசிய பின்பு, அவர்களின் நடத்தையால் விளையவிருக்கும் பயங்கரமான பாடுகளைப் பற்றி அவர்களுக்கு இயேசுநாதர் எச்சரிக்கலானார்.

''பாம்புகளே! விரியன் பாம்புக் குட்டிகளே! நரக வேதனைகளிலிருந்து நீங்கள் எவ்வாறு தப்புவீர்கள்? தீர்க்கதரிசிகளையும், அறிஞர்களையும், மறைவல்லுனர்களையும், நீங்கள் போற்றவில்லை. சிலரை நீங்கள் கொன்றீர்கள். சிலரை நீங்கள் சிலுவையில் அறைந்தீர்கள். சினகோக் சபைகளில் சிலரை நீங்கள் அவமதித்தீர்கள். இவற்றுக்கு உரிய பலன்களை அனுபவியாமல நீங்கள் தப்ப முடியாது'' என்று எச்சரித்தார்.

இந்த எச்சரிக்கையைச் செய்த பின்னர், எழுந்து, கோயிலில் இருக்கும் பெண்களின் முற்றத்தைக் கடந்து சென்று, அதற்கு எதிரே இருக்கும் ஓர் இடத்தில், தம் சீடர்களுடன் இயேசுநாதர் உட்கார்ந்தார்.

அவர் இருந்த இடத்துக்கு எதிரே உண்டியல் பெட்டிகள் இருந்தன, திருவிழா சமயமாதலால் மக்கள் திரள் திரளாக வந்து, தாங்கள் செலுத்த வேண்டிய காணிக்கைகளை, உண்டியலில் பணமாகச் செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

மக்கள் காணிக்கை செலுத்துவதை இயேசுநாதர் கவனித்துக்கொண்டிருந்தார்.

அப்போது விதவை ஒருத்தி வந்து, உண்டியலில் தான் செலுத்த வேண்டிய காணிக்கையைச் செலுத்தினாள். இரண்டு காசுகளைக் கொணர்ந்து உண்டியலில் போட்டுவிட்டு, பிறருக்குத் தெரியாமல், அவள் திரும்பினாள்.

பணக்காரர்களோ, தங்கள் கைகள் நிறையப் பணத்தை அள்ளி உண்டியலில் செலுத்தினார்கள். தங்கள் பெருமையை இறைவனுக்கும் மற்ற மக்களுக்கும் எடுத்துக் காட்டும் பொருட்டு, பணக்காரர்கள் இப்படிச் செய்தார்கள். பணத்தைக்கொண்டே இறைவனையும் சரிப்படுத்திவிடலாம் என்று பணக்காரர்கள் எண்ணினார்கள்.

உண்டியலில் காணிக்கை செலுத்தும் மக்களின் மனநிலை குறித்து இயேசுநாதர் தம் சீடர்களுக்கு விளக்கினார். "மற்றவர்கள் உண்டியலில் செலுத்தி இருக்கும் காணிக்கையைவிட இந்த ஏழை விதவை செலுத்தி இருக்கும் காணிக்கை சொற்பமாய் இருப்பினும் அதிக சிறப்புடையது. ஏனெனில், தன்னிடம் இருப்பது அனைத்தையும் இந்த ஏழை விதவை உண்டியலில் சேர்த்துவிட்டாள் மற்றவர்களோ தங்களிடம் நிறைய இருப்பதில் ஒரு சிறு பகுதியை மட்டும் தான் தற்பெருமைக்காக உண்டியலில் சேர்த்து இருக்கிறார்கள். ஆகவே, அது அவ்வளவு சிறப்புடையதாகாது" என்று சொன்னார்.

அன்று செவ்வாய்க்கிழமை; மாலை நேரம் வரை ஜெருசலத்தில் இருந்துவிட்டு, இரவுப் பொழுதை வேறு இடத்தில் கழிப்பதற்காக இயேசுநாதர் எழுந்து போய்விட்டார்; சீடர்களும் அவருடன் சென்றார்கள்

ஒலிவேத்து மலைக்குச் சென்ற பின், ஜெருசல நகருக்கு நேரவிருக்கும் அழிவையும், அதிகாரிகளால் தமக்கு நேரவிருக்கும் ஆபத்தையும், தமக்குப் பின்னர் நடக்க வேண்டிய முறைகள் பற்றியும் சீடர்களுக்கு இயேசுநாதர் சொன்னார்.

அபிப்பிராய பேதம்

செவ்வாய்க்கிழமை யன்று, இயேசுநாதருடன் நடத்திய வாக்குவாதத்தால், பரிசேயர்கள் திணறிப் போய் இருந்தார்கள். இயேசுநாதர் செய்த போதனைகளும், தங்களை அவர் கண்டித்துப் பேசியிருப்பதும் பரிசேயர்களுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணின.

''இயேசுநாதர் கோயிலுக்கே வந்து, அங்கு அமர்ந்து கொண்டு போதனை செய்யத் தொடங்கிவிட்டார். இனியும் ஒன்றும் செய்யாது சும்மா இருந்தால், தங்கள் அதிகாரத்துக்கும் ஆதிக்கத்துக்கும் ஆபத்து நேரக் கூடும் என்று அவர்கள் அஞ்சினார்கள். செல்வாக்குள்ள ஒருவரைப் பட்டப் பகலில கைது செய்வதோ தண்டிப்பதோ சாத்தியப்படாது. என் செய்வது?'' என்று கலக்கம் அடைந்தார்கள்.

ஆகவே இதுபற்றி ஆலோசித்து ஒரு முடிவு எடுத்து, தாமதியாது காரியங்களைச் செய்யும் பொருட்டுப் பிரதான ஆசாரியன் கைபாஸ் இல்லத்தில் கூடினார்கள்.

''இப்போது பாஸ்கு விழா சமயம். இயேசுநாதரை இது சமயம் கைது செய்தால், மக்களிடையே கொந்தளிப்பும் குமுறலும் ஏற்படும். ஆகவே, பாஸ்கு விழாவுக்குப் பின்னர், இயேசுநாதரைக் கைது செய்து தண்டிப்பதே சௌகரியமாய் இருக்கும்'' என்று சிலர் அபிப்பிராயப்பட்டார்கள்.

வேறு சிலர், ''அவ்வாறு காத்திருந்தால், பாஸ்கு விழா முடிந்ததும் மற்றவர்களுடன் சேர்ந்து இயேசுநாதரும் புறப்பட்டுப் போய்விடுவார். பிறகு, அவரைப் பிடிப்பதோ அல்லது தண்டிப்பதோ சாத்தியப்படாது. ஆகவே, இப்பொழுது கைது செய்து தண்டிப்பதே நலம்'' என்று சொன்னார்கள்.

''சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் இயேசுவைப் பிடிக்க முடியாது. ரோமர்களின் காவல்படை இருப்பதால், கலகம் நேராதபடி செய்துவிடலாம். ஆகவே, பாஸ்கு விழா முடிவதற்குள், இயேசுவை அவசியம் பிடித்துவிட வேண்டும். பலர் அறியப் பிடிக்காமல், தந்திரமாக, இரவு நேரத்தில் பிடித்து, தண்டிப்பதே உசிதமாய் இருக்கும்'' என்று மற்றும் சிலர் தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள்.

இயேசுநாதரை எப்படிப் பிடிப்பது, எப்பொழுது பிடிப்பது என்பதுபற்றி, பரிசேயர்கள் விவாதித்துக்கொண்டிருந்த சமயத்தில், எதிர்பாராத விதமாய் அவர்களுக்கு ஒரு உதவி கிடைத்தது.

இயேசுநாதரின் பன்னிரு அப்போஸ்தலர்களில் யூதாஸ் இஸ்காரியத் என்பவன் ஒருவன். அவன் குருமார்களை அணுகி,

"அந்த மனிதரை உங்களிடம் நான் பிடித்துத் தந்தால், எனக்கு நீங்கள் என்ன தருவீர்கள்?" என்று கேட்டான்.

இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த குருமார்கள், யூதாஸிடம் முப்பது வெள்ளி நாணயங்களை எண்ணிக் கொடுத்தார்கள்.

பணத்தைப் பெற்றுக்கொண்டான் யூதாஸ். தக்க சந்தர்ப்பத்தில் இயேசுவைக் காட்டிக் கொடுக்க வேண்டும் என்ற முடிவுடன் யூதாஸ் அங்கிருந்து இயேசுநாதரிடம் திரும்பினான்.

காரியத்தை இரகசியமாகவும் எளிதாகவும் இனி முடித்து விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டு, யூத குருமார்கள் ஆனந்தம் அடைந்தார்கள்

முன்மாதிரி

ஜெருசலத்துக்கு வந்த நாள் முதல், பகல் பொழுதை ஜெருசலம் நகரிலும், இரவுப் பொழுதைப் பெத்தனியிலும், ஒலிவேத்து மலையிலும் இதுவரை இயேசுநாதர் கழித்து வந்தார் என்பதை நாம் அறிவோம். அந்த வழக்கப்படி புதன்கிழமை யன்றும் தம் சீடர்களுடன் பெத்தனியில் இயேசுநாதர் இரவுப் பொழுதைக் கழித்தார்.

விடிந்தால் வியாழககிழமை. அன்றையத் தினம் ஜெருசல நகரம் மிகவும் கோலாகலமாக விளங்கும். தங்கள் முன்னோர்கள் எகிப்தில் அடிமைகளாய் இருந்து விடுதலை பெற்றதை நினைந்து ஆண்டுதோறும், ஒரு விழாவை யூதர்கள் விமரிசையாகக் கொண்டாடுவார்கள். அந்த விழாவுக்குப் பாஸ்கு விழா என்று பெயர்.

பாஸ்கு விழா அன்று இரவு, விமரிசையான விருந்துக்கு ஏற்பாடு செய்து, யூதர்கள் சாப்பிடுவார்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் அனைவருமே சேர்ந்து சாப்பிட வேண்டும் என்பது சம்பிரதாயம்.

பாஸ்கு விழாக் கொண்டாட்டத்தை இரவு நேரத்தில்

தொடங்குவது வழக்கம். இதுவரை இயேசுநாதர் இரவுப் பொழுதை ஜெருசலத்தில் கழிக்கவில்லை, பெத்தனியில் தான் கழித்து இருக்கிறார்.

பொழுது விடிந்தது. அன்று கொண்டாட வேண்டிய பாஸ்கு விழாவை எங்கு கொண்டாடுவது என்று சீடர்களால் தீர்மானிக்க முடியவில்லை. ஆகவே, அவர்கள் இயேசுநாதரிடம், ''அண்ணலே! எங்கு சென்று, பாஸ்கு விழா விருந்தை நாம் சாப்பிடலாம்?'' என்று கேட்டார்கள்.

பொருள் காப்பாளனாக இருந்த யூதாஸ், தன்னை இயேசுநாதர் அனுப்புவார் என்று எண்ணிக்கொண்டிருந்தான். ஆனால், இயேசுநாதர் அவனை அனுப்ப விரும்பவில்லை. ஆகவே அவர், தம் சீடர்கள் இருவரை—பீட்டரையும் ஜானையும் நோக்கி, ''நீங்கள் இருவரும் ஜெருசலம் நகருக்குச் செல்லுங்கள். தண்ணீர்க் குடம் ஒன்றை எடுத்துக்கொண்டு, ஆடவன் ஒருவன் வருவதை நீங்கள் காண்பீர்கள். அவன் பின்னே சென்று, அவன் நுழைகிற வீட்டுக்குள் நீங்களும் நுழையுங்கள். பிறகு அந்த வீட்டுக்குச் சொந்தக்காரரைச் சந்தித்து 'எங்கள் குருநாதர் தம் சீடர்களுடன் பாஸ்கு விருந்து சாப்பிட விரும்பும் பந்திக்கட்டு எங்கே இருக்கிறது?' என்று கேளுங்கள். ஆசனங்கள் போடப்பட்ட ஒதுப்புறமான ஒரு அறையை உங்களுக்கு அவர் காட்டுவார். அங்கே விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைத்துவிட்டு நீங்கள் திரும்புங்கள்'' என்று சொன்னார்.

அதன்படி அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். தண்ணீர்க் குடம் ஒன்றைச் சுமந்துகொண்டு ஒரு ஆடவன் எதிர்ப்பட்டான். பீட்டரும் ஜானும் அவனைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

ஜெருசலம் நகரின் தென்மேற்குப் பாகத்தில் இருக்கும் சீயோன் குன்றின்மீது ஒரு மாளிகை இருந்தது. அந்த மாளிகைக்குள் தண்ணீர்க் குடம் சுமந்து வந்தவன் சென்றான்.

அவன் பின்னே சென்று சீடர் இருவரும் வீட்டுக்கு உரியவரைச் சந்தித்து, விவரத்தைச் சொல்லிக் கேட்டார்கள்.

அவர் சம்மதிக்கவே விருந்துக்குத் தேவைப்படும்

பொருள்களை அங்கே சேகரித்தார்கள். புளியாத மாவில் செய்த ரொட்டி, எலும்பை முறிக்காமல் பலியிட்டு, நெருப்பில் வாட்டிய ஆட்டுக்குட்டி, கசப்பான ஒரு வகைப் பூண்டு, தண்ணீர் கலந்த திராட்சை ரசம், சாரசோத் என்னும் ஒரு வகைக் குழம்பு அனைத்தையும் சேகரித்து, தயார் செய்து வைத்துவிட்டு, இயேசுநாதரிடம் திரும்பினார்கள்.

மாலை நேரம் வந்ததும், தம் பன்னிரு அப்போஸ்தலர்களையும் அழைத்துக்கொண்டு பாஸ்கு விருந்து சாப்பிட வேண்டிய இடத்துக்கு இயேசுநாதர் போனார்.

யார் யாருக்கு எந்த இடம்? இயேசுநாதருக்குப் பக்கத்திலே யார் அமர்வது,என்பதுபற்றிச் சர்ச்சை உண்டாயிற்று. ஒவ்வொரு அப்போஸ்தலரும் தனக்குத்தான் முதலிடம் வேண்டும் தனக்குத்தான் முதலிடம் வேண்டும் என்று வீம்பு செய்தனர். முதலிடத்தில் அமர்வதுதான் பெருமை என்று அவர்கள் தவறாகக் கருதினர்.

பணிவின் சிறப்பைப்பற்றித் தான் பல முறை போதனை செய்து இருந்தும், அதைப் புரிந்துகொள்ளாமல் அப்போஸ்தலர்கள் முதல் இடத்துக்குச் சச்சரவிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு இயேசுநாதர், ''இனி இவர்களைச் செயல் மூலம் திருத்துவதே சிறந்தது'' என்று அரியதொரு செயலைச் செய்தார்.

தம் இல்லத்துக்கு வரும் விருந்தினர்களின் பாதங்களை அடிமைகளைக் கொண்டு கழுவச் செய்வது யூதர்கள் கடைப்பிடித்து வந்த ஒரு பழக்கம். அப்போஸ்தலர்களின் மனப்போக்கைத் தம் விருப்பத்துக்கு இயைய மாற்றும் பொருட்டு, இயேசுநாதர் ஒரு காரியத்தைத் தாமே மனமுவந்து செய்ய முன்வந்தார்.

இயேசுநாதர் பந்தியைவிட்டு எழுந்து மேல் அங்கியைக் களைந்துவிட்டு, ஒரு துண்டை எடுத்துத் தமது இடுப்பில் கட்டிக்கொண்டார். ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி எடுத்துக்கொண்டு அப்போஸ்தலர்களிடம் சென்றார்.

ஒவ்வொரு சீடனின் பாதங்களைக் கழுவி, துண்டால் துடைத்துவிட்டார் இயேசுநாதர்.

இயேசுநாதரின் பணிவான இந்தச் செயலைப் பார்த்ததும், சீடர்கள் வாயடைத்துப் போனார்கள். அவர்களால் ஒன்றும் பேச முடியவில்லை. அவர் செய்வதை அங்கீகரித்து வாளா இருந்தனர்.

ஆனால், பீட்டர் என்னும் அப்போஸ்தலரால் இதைப் பொறுக்க முடியவில்லை. தம் பாதங்களைச் சடுதியில் பின்னுக்கு இழுத்துக்கொண்டு, ''குருநாதா! தாங்களா என் பாதங்களைக் கழுவது?'' என்று நாணமும் துயரமும் ஒருங்கே கலந்த தொனியில் கேட்டார்.

''நான் செய்வதின் கருத்து இப்பொழுது உனக்கு விளங்காது. பின்னர் இதன் பொருளை நீ தெரிந்துகொள்வாய்'' என்று இயேசுநாதர் பதில் சொன்னார்.

ஆயினும், பீட்டருக்குச் சம்மதம் இல்லை. ''என் பாதங்களைத் தாங்கள் கழுவ நான் ஒருபோதும் சம்மதியேன்'' என்று பிடிவாதமாகச் சொன்னார் பீட்டர்.

''உன் பாதங்களைக் கழுவ நீ அனுமதியாவிடில், உன்னோடு எனக்குத் தொடர்பு இராது!'' என்று சிறிது கண்டிக்கும் தோரணையில் இயேசுநாதர் சொன்னார்.

இப்படி இயேசுநாதர் கண்டித்ததும் பீட்டர் துணுக்குற்றார். ''குருநாதா! இதுவாயின் என்று கால்களை மட்டுமல்ல, எனது தலையையும் கைகளையும் கழுவவும்'' என்று பதில் சொன்னார் பீட்டர்.

அதற்கு இயேசுநாதர், ''நீராடினவனுக்குக் கால்களை மட்டும் கழுவினால் போதும். மற்றப்படி அவன் முழுதும் சுத்தமாய் இருக்கிறான். உங்களில் ஒருவனை மட்டும் தவிர்த்து, மற்றவர்கள் அனைவரும் சுத்தமாய்த்தான் இருக்கிறீர்கள்'' என்று சொன்னார்.

இவ்வாறு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவிய பின்னர், இயேசுநாதர் தமது மேல் அங்கியை எடுத்து அணிந்துகொண்டு, மீண்டும் வந்து பந்தியில் அமர்ந்தார். பிறை வடிவமுள்ள மேஜையைச் சுற்றி, விருந்து உண்ண அவர்கள் உட்கார்ந்தார்கள்.

இயேசுநாதர் நடுவே இருந்தார். அவருக்கு இடது பக்கம் பீட்டர் இருந்தார். வலது பக்கம் ஜான் இருந்தார். ஜானுக்குப் பக்கத்தில் யூதாஸ் இருந்தான்; மற்ற அப்போஸ் தலர்களும் தத்தம் ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

அப்போது இயேசுநாதர் தம் சீடர்களை நோக்கி, ''நான் இப்பொழுது செய்ததின் கருத்தை நீங்கள் தெரிந்துகொள் ளுங்கள். நீங்கள் என்னை உங்கள் குரு என்று அழைக்கி றீர்கள். குருவாய் இருக்கும் நான் ஏன் உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால், மற்றவர்களின் பாதங்களைக் கழுவும் பணிவு உணர்ச்சி உங்களிடம் ஏற்பட வேண்டும் என்பதைப் போதிக்கும் பொருட்டேயாம். இந்தச் செய்கை உங்க ளுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கட்டும்'' என்று சொன்னார்.

கடைசி விருந்து

மேலே குறிப்பிட்ட போதனையைச் செய்த பின்னர், விருந்தின் பிரதான புருஷராக விளங்கும் இயேசுநாதர் பாஸ்கு விருந்தில் செய்யப்படும் சடங்குகளை முறைப்படி செய்தார். பிறகு புளியாத மாவில் செய்த ரொட்டியை விண்டு, சாரசோத் குழம்பில் தொட்டுச் சாப்பிட்டார். கசப்புப் பூண்டையும் அதில் தோய்த்துச் சாப்பிட்டார். தங்கள் முன்னோர்கள் எகிப்தில் அடிமைகளாய் இருந்த கசப்பு நினைவை ஆண்டுதோறும் நினைவில் இருத்தி, அதற்கு அறிகுறியாக, பாஸ்கு விழா விருந்தின்போது, கசப்புப் பூண்டை யூதர்கள் சாப்பிடுவார்கள்.

அந்த முறையைப் பின்பற்றி, சாப்பிடப் போன சமயத் தில், பலவித கசப்பு எண்ணங்கள் இயேசுநாதரின் உள்ளத் தில் தோன்றின. உடனே, அவர் தம் எதிரிலும் பக்கத்திலும் இருக்கும் சீடர்களை நோக்கி, ''உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்'' என்று சொன்னார்.

''என்னைக் காட்டிக்கொடுப்பவர்கள் இருக்கிறார்கள்!''

என்று இயேசுநாதர் இரு முறை தம் அப்போஸ்தலர்களுக்கு முன்பு கூறி இருக்கிறார். அப்போதெல்லாம் அதைக் கேட்டு அவர்களில் யாரும் திடுக்கிடவில்லை. ஆனால், இப்பொழுதோ, ''உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்!'' என்று இயேசுநாதர் கூறியதும், அப்போஸ்தலர்கள் திடுக்கிட்டார்கள். காட்டிக் கொடுக்கப் போகிறவன் யார் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டார்கள் ''அது நானா? அது நானா?'' என்று ஒவ்வொரு அப்போஸ்தலரும் இயேசுநாதரைக் கேட்டார்கள்.

பெயரைக் குறிப்பிடாது இயேசுநாதர் மௌனமாய் இருந்தார்.

அப்போது யூதாஸ் அவரிடம், ''ரபியே! தங்களைக் காட்டிக்கொடுக்கப் போகிறவன் நானா?'' என்று கேட்டான்.

பிறர் காதில் விழாதபடியும், ஆனால் யூதாஸ் காதில் மட்டும் விழும்படியும், ''ஆம், நீதான்!'' என்று இயேசுநாதர் மெதுவாகச் சொன்னார்.

பீட்டரும் ஜானும், காட்டிக் கொடுக்க இருக்கும் ஆள் யார் என்பதைத் தெரிந்துகொள்ளப் பெரிதும் ஆவலோடு இருந்தார்கள். ஆயினும் பீட்டருக்கு, இயேசுநாதரிடம் கேட்கத் துணிவு உண்டாகவில்லை. ஆகவே, ஜானுக்குச் சாடைகாட்டி, இயேசுநாதரிடம் விவரத்தைக் கேட்கும்படி தூண்டினார்.

பீட்டர் காட்டிய சாடையைக் கவனித்த ஜான் மெதுவாக இயேசுநாதரிடம், ''குருநாதா! தாங்கள் குறிப்பிடும் ஆள் யார்? சொல்லுங்கள்'' என்று மெதுவாகக் கேட்டார்.

இப்பொழுதும் பெயரைக் குறிப்பிட இயேசுநாதர் விரும்பவில்லை. ஆயினும், ஜான் கேட்ட கேள்விக்கு அவர் பதில் சொல்ல முன்வந்தார்.

''குழம்பில் ரொட்டியைத் தோய்த்து நான் யாரிடம் கொடுக்கிறேனோ, அவன்தான் என்னைக் காட்டிக்கொடுப்பான்'' என்று இயேசுநாதர் சொன்னார்.

பிறகு ரொட்டியைப் பிட்டு, அதைக் குழம்பில்

தோய்த்து யூதாஸிடம் கொடுத்தார்.

யூதாஸ் அந்த ரொட்டியை வாங்கிச் சாப்பிட்டான். ஆயினும் அவன் மனம் திருந்தவில்லை.

இந்த ரொட்டியைத் தின்றதும், சாத்தான் அவன் உள்ளே புகுந்து வேலை செய்யத் தொடங்கினான்.

மேலும் அந்த இடத்தில் இருக்க அவன் மனம் ஒப்ப வில்லை. வெளியே போவதற்காக அவன் எழுந்தான்.

இதைக் கவனித்த இயேசுநாதர் அவனிடம், ''நீ செய்ய வேண்டிய காரியத்தைத் தாமதியாது செய்'' என்று சொன்னார்.

இவர்கள் இருவரும் பேசிக்கொண்டது, மற்ற அப்போஸ் தலர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ ஒரு காரியமாக இயேசுநாதர் யூதாஸை வெளியே அனுப்புகிறார் என்று மற்ற அப்போஸ்தலர்கள் எண்ணிக்கொண்டார்கள்.

யூதாஸ் எழுந்து வெளியே போனான். இருட்டிவிட்டது. எங்கும் இருள் பரவத் தொடங்கிற்று.

மண்ணுலக வாழ்க்கையில் இயேசுநாதர் உண்ட கடைசி விருந்து இது. அதனால் இந்த விருந்தைக் கிறிஸ்தவ சமய மரபில் கடைசி விருந்து என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்த விருந்து நடைபெற்றது வியாழக்கிழமை இரவு என்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் நடந்த தேதியில் அபிப்பிராய பேதம் இருக்கிறது.

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவரும் நிசான் மாதம் பதினான்காம் தேதி நடந்ததாக எழுதி இருக்கிறார்கள்.

ஜான் என்பவர் நிசான் மாதம் பதின்மூன்றும் தேதி நடந்ததாகக் குறிப்பிட்டு இருக்கிறார். இந்த வேறுபாட்டுக்குக் காரணம் யாது என்பதை, கிறிஸ்தவ நூலாசிரியர்கள் விவரமாக எழுதி இருக்கிறார்கள். விளக்கம் வேண்டுவோர் அந்த நூல்களைப் படிப்பார்களாக.

* * *

ஒரு நாட்டில் பொய்யும் புரட்டும், வஞ்சனையும் சூழ்ச்சி யும், கொலையும் கொடுமையும், வம்பும் வழக்கும் அகந்தை

யும் ஆணவமும் மிகுந்து அந்த நாடு தலைவிரிகோலமாய் இருப்பதாக வைத்துக்கொள்வோம்.

அப்போது அந்த நாட்டில் ஒரு மகான் அவதரித்து, மக்களை உய்விக்கும் பொருட்டுச் சேவை செய்ய முன் வருகிறார். அவர் செய்த சேவைகளையும் போதனைகளையும் மறந்து, அந்த நாட்டு மக்கள் வாழ்கின்றனர்.

மாபெரும் தியாகம் ஒன்றைச் செய்தாவது, மக்களை உய்விக்கலாம் என்று அந்த மகான் எண்ணுகிறார். அப்போது அவர் உள்ளத்தில் பளிச்சென ஒரு உண்மை தோன்றுகிறது. நான் செய்யும் தியாகத்தையும் மக்கள் மறந்துவிட்டால் என் செய்வது?

அதற்காக அந்த மகான் ஒரு ஏற்பாட்டைச் செய்கிறார். அந்த ஏற்பாட்டையே புனித பலி உணவு என்று கிறிஸ்தவ சமய மரபில் குறிப்பிடுகிறார்கள். இயேசுநாதர் செய்த தியாகத்தையும், எதன் பொருட்டு அந்தத் தியாகத்தைச் செய்ய அவர் முன்வந்தார் என்பதையும் நாள் தோறும் நினைவுகூர்கிறார்கள். அந்த நினைவின் பயனாய் இயேசுநாதரின் சாநித்தியம் என்றும் தங்களுடன் இருந்து, தங்களுக்கு வழிகாட்டுவதாக, கிறிஸ்தவ சமய சகோதரர்கள் நம்புகிறார்கள். அந்த ஏற்பாட்டைப் புனிதமாகப் போற்றிக் கொண்டாடுகிறார்கள்.

யூதாஸ் சென்ற பிறகு, மற்ற பதினொரு அப்போஸ்தலர்களிடம் ஒன்றை நினைவுபடுத்த விரும்பினார் இயேசுநாதர். தம் எதிரேயிருந்த ரொட்டி ஒன்றை எடுத்து, ஆசிர்வதித்துவிட்டு, சிறு சிறு துண்டுகளாகச் செய்து, ஒவ்வொரு அப்போஸ்தலரிடமும் ஒரு துண்டைக் கொடுத்தார். ''உங்களுக்காகப் பலியாக்கப்படும் என் உடல் இது! இதை உண்ணுங்கள். எப்பொழுதும் என்னை நினைவுகூருங்கள்'' என்று சொன்னார்.

அதன் பின்னர் கோப்பையில் இருக்கும் திராட்சை ரசத்தை எடுத்து, ''உங்களின் மீட்புக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் இது! இதை நீங்கள் பருகுங்கள்'' என்று சொல்லிக் கொடுத்தார்.

அந்த ரொட்டியைச் சாப்பிட்டு, திராட்சை ரசத்தை அப்போஸ்தலர்கள் பருகினர்.

ஒருவர் செய்த தியாகத்தை மக்கள் மறப்பார்களாயின், அதோடுகூட, எந்த இலட்சியத்துக்காக அவர் தியாகம் செய்தாரோ, அந்த இலட்சியத்தையும் மக்கள் மறந்து போவர். அப்படியின்றி அவர் செய்த தியாகத்தை மக்கள் நினைவு கூர்ந்தால், அதோடுகூட அவர் எந்த இலட்சியத்துக்காக உயிர் நீத்தாரோ, அந்த இலட்சியமும் ஒன்றி என்றும் நினைவில் இருக்கும்.

இந்த நினைவையே தேவ நற்கருணை என்னும் சடங்கில் இயேசுநாதர் நிறைவேற்றி வைத்து இருக்கிறார்.

துயரத்தில் ஆழ்ந்தார்

இறைவனுக்கு நன்றியறிதல் தோத்திரம் சொல்லிவிட்டு இரவுச் சாப்பாட்டை எல்லாரும் முடித்துக்கொண்டார்கள். பிறகு அந்த அறையிலேயே எல்லாரும் சிறிது நேரம் தாமதித்து இருந்தார்கள்.

அப்போது இயேசுநாதர் தம் அப்போஸ்தலர்களிடம், தனக்கு நேர இருப்பதையும், தம் காரணமாக அவர்களுக்கு நேர விருப்பதையும் குறிப்பாகச் சொன்னார். "என் நிமித்தமாக இன்று இடறல்படுவீர்கள். நீங்களும் சிதறித் தனித் தனியே ஓடிவிடுவீர்கள்மேய்ப்பவன் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால், ஆட்டு மந்தை சிதறிப் போகும் தானே?'' என்று சொன்னார்.

இயேசுநாதர் இவ்வாறு சொன்னதும் அப்போஸ்தலர்கள் கலக்கம் அடைந்தார்கள். அப்போஸ்தலர்களுக்குத் தலைவரைப்போல் இருக்கும் பீட்டர் இது சமயம் இயேசுநாதரைப் பார்த்து, "பெருமானே! நாங்கள் உங்களைவிட்டுப் பிரிந்து இருக்க மாட்டோம். நீங்கள் சிறைக்குச் சென்றால் நாங்களும் சிறைக்கு வருவோம். நீங்கள் உயிர் துறந்தால் நாங்களும் உங்களோடு உயிர் துறப்போம்'' என்று சொன்னார்.

உறுதிப்பாடு உடையவர்களும் சிற்சில சமயம் உறுதி குன்றிப்போவர் என்பதை இயேசுநாதர் அறிவார். ஆகவே அவர் பீட்டரிடம், "சைமன்! இன்று இரவு சேவல் இரண்டு முறை கூவுவதற்கு முன்னர், என்னை மூன்று முறை நீ மறுதலிப்பாய்" என்று கூறினார்.

இதன் பின்னர் அந்த அறையைவிட்டு எல்லாரும் வெளியே வந்தார்கள். அப்போது இரவு சுமார் ஒன்பது மணி இருக்கும். பூரண சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வீதிகள் வழியாக நடந்து, ஒலிவேத்து மலையடிவாரத்துக்கு எல்லாரும் போனார்கள். அங்கே ஜெத்சமனி என்று ஒரு தோட்டம் இருந்தது.

அந்தத் தோட்டம் சந்தடியின்றி அமைதியாக இருந்தது. சீடர்கள் இயேசுநாதரைத் தொடர்ந்து அமைதியாகச் சென்றார்கள். வருத்தமுற்ற மனத்தோடு இயேசுநாதர் அவர்களுக்கு முன்னே சென்றுகொண்டிருந்தார்.

தோட்டத்தை அடைந்து எல்லாரும் உள்ளே நுழைந்தார்கள். சிறிது தூரம் சென்றதும் சௌகரியமான ஒரு இடம் வந்தபோது, இயேசுநாதர் தம் சீடர்களை நோக்கி, "நீங்கள் இங்கே இருந்து பிரார்த்தனை செய்யுங்கள்; ஆசாபாசங்களுக்கு இடம் கொடாமல் பிரார்த்தனையில் மட்டும் ஈடுபடுங்கள்" என்று சொன்னார்.

பிறகு தமக்குப் பிரியமான மூன்று சீடர்களை—பீட்டர் ஜான், ஜேம்ஸ்— தம்முடன் அழைத்துக்கொண்டு, இயேசுநாதர் மேலும் நடந்து சென்றார்.

அவருடைய உள்ளம் அளவற்ற துயரில் மூழ்கி இருந்தது. அவர் தம்முடன் வந்த மூன்று சீடர்களையும் நோக்கி, "நீங்கள் இங்கேயே தங்கி இருங்கள். எனது ஆன்மா சாவுக்கான வேதனையில் சூழ்ந்திருக்கிறது" என்று கூறினார்.

பிறகு அங்கிருந்து இயேசுநாதர் மேலும் சிறிது தூரம் சென்றார். துயரமும் கலக்கமும் மேலிட்டு நின்றதால் மேலும் அவரால் நடக்க முடியவில்லை. கால்கள் தள்ளாடின, ஏதையோ சார்ந்து நிற்க விரும்புவதுபோல் கைகள் இரண்டும் பக்கவாட்டில் விரிந்தன. துயரம் தாங்காது,

இயேசுநாதர் குப்புற விழுந்துவிட்டார். அந்த நிலையில் இருந்தபடியே இறைவனை அவர் இறைஞ்சத் தொடங்கினார் "எந்தையே! உம்மால் ஆகாதது ஒன்றும் இல்லை. இந்த நலிவிலிருந்து என்னை நீர் கரையேற்றும். உமது விருப்பம் எதுவோ, அது நிறைவேறட்டும்" என்று இறைஞ்சினார்.



துயரத்தில் ஆழ்ந்திருந்த இயேசுநாதர், இறைவனை வெகு நேரம் இறைஞ்சினார்.

பக்கத்தில் இருந்த சீடர்கள், சிறிது நேரத்துக்குப் பிறகு, தூங்கி விட்டார்கள்.

துயரத்தில் ஆழ்ந்திருந்த இயேசுநாதர் ஆறுதல்பெறும் பொருட்டுத் தம் சீடர்கள்மூவரும் இருக்கும் இடத்துக்கு வந்தார்.

மூன்று சீடர்களும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர் "சைமனே! நீ தூங்குகிறாயா? ஒரு மணி நேரஅவகாசம் விழித்துஇருக்கஉன்னால் இயலாது போயிற்று? பிரார்த்தனை செய்யுங்கள். அப்போதுதான் சோதனைக்கு இடம் கொடாமல் தப்ப முடியும்; உணர்ச்சி பலமாய் இருப்பினும் உடல் பலவீனமாய் இருக்கிறது" என்று சொன்னார்.

சீடர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, இயேசுநாதர் திரும்பிச் சென்று, மீண்டும் பிதாவிடம் இறைஞ்சினார். "தந்தையே! இக் கசப்பான பலியை நான் செய்தே தீர வேண்டுமென்றால், அது, உமது திருவுளமாயின் அதன்படியே ஆகக் கடவது" என்று வேண்டினார்.

இயேசுநாதர் மீண்டும் சீடர்களிடம் திரும்பி வந்தார். அவர்கள் மூவரும் அயர்ந்து தூங்குவதைக் கண்டு, மூன்றும் முறையாக, திரும்பிச் சென்று அதே வார்த்தைகளை மீண்டும் சொல்லி இறைவனை இறைஞ்சினர்.

பிறகு திரும்பி வந்து சீடர்களைப் பார்த்தார். இப் பொழுதும் அவர்கள் தூங்கிக்கொண் டிருந்தார்கள் தூங்கும் சீடர்களைப் பார்த்து இயேசுநாதர் பேசத் தொடங்கினர்: ''நீங்கள் தூங்கி ஒய்வு எடுத்துக்கொள்ளுங்கள். நேரம் வந்துவிட்டது. மனுமகனைப் பாவிகள் கையில் ஒப்படைக்கப் போகிறார்கள். எழுங்கள்; நாம் செல்லலாம்; காட்டிக் கொடுப்பவன் இதோ அருகில் இருக்கிறன்'' என்று சொன்னர்.

இப்படி இயேசுநாதர் சொல்லிக்கொண்டிருக்கும்போது, அந்த இடத்தில் சந்தடியும் சலசலப்பும் உண்டாயின.

காட்டிக் கொடுத்தான்

கடைசி விருந்தின்போது, யூதாஸ் இஸ்காரியத் இடை யில் எழுந்து வெளியே சென்றன். ''செய்ய இருப்பதை விரைவாக நீ செய்'' என்று இயேசுநாதர் அவனிடம் சொன் னரல்லவா!

ஆகவே தாமதியாது அவன் யூத குருமார்களிடம் சென்றன். தன்னை ஆவலோடு எதிர்பார்த்து இருக்கும் அவர்களை அணுகி, ''இன்றைய இரவு இயேசுவைப் பிடித்து விடலாம். அதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்'' என்று சொன்னன்.

• • •

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நாம் நினைவுபடுத்திக் கொள்வது அவசியம் ஆகும். அப்போதுதான் இதன் பின்னர் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் பற்றி நாம் எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

இயேசுநாதர் வாழ்ந்த காலத்தில், பாலஸ்தீன நாட்டின்

ஆட்சி யாரிடம் இருந்தது? அந்த நாட்டை யூதர்கள் ஆட்சி புரிந்தார்களா? அல்லது அந்நிய நாட்டினரான ரோமர்கள் ஆட்சி புரிந்தார்களா?

இருவருமே ஆட்சி புரிந்தார்கள் என்று சொல்லலாம். பரிசேயர்களும் யூதப் பிரமுகர்களும் அடங்கிய சனதரீம் சபை இருக்கிறதே, அதற்குப் பெரும் அளவு ஆட்சிப் பொறுப்பு இருந்தது. கோயில் நிர்வாகம், கல்வி, நீதி வழங்குவது போன்ற நிர்வாகப் பொறுப்புகளை யூதர்களிடம் விட்டுவிட்டு, வரி வசூல் செய்வது, நாட்டைப் பாதுகாதுப்பது போன்ற துறைகளை மட்டுமே ரோமானியர்கள் தங்கள் வசம் வைத்துக்கொண்டார்கள். யூதப் பிரமுகர்களும் ரோமன் ஆட்சியாளர்களும் ஒருவருக்கு ஒருவர் உடந்தையாய் இருந்துகொண்டு, பொதுமக்களைக் கசக்கிப் பிழிந்தார்கள். இரு வகையான ஆட்சிக்குள் அகப்பட்டுக்கொண்டு, தப்புவதற்கு வழி வகைகள் தெரியாது, பொது மக்கள் திக்குமுக்காடித் தவித்தார்கள்; ஆன்மீகத் துறையில் யூத குருமார்களுக்கு அடிமைகளாய் இருந்தார்கள்; அரசியல் துறையில் ரோமானியர்களுக்கு அடிமைகளாய் இருந்தார்கள்.

இப்படி ஒரு நிலை பாலஸ்தீன நாட்டில் நிலவின பொழுதுதான், இயேசுநாதர் அந்த நாட்டில் பிறந்தார்; வளர்ந்தார்; தமது இன்னுயிரையும் தியாகம் செய்யப் போகிறார். அவருடைய சீடர்களில் ஒருவனே, அவரை எதிரிகளிடம் காட்டிக் கொடுப்பதற்காக, ஆட்களை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறான்.

* * *

இயேசுநாதரின் சீடர்களில் ஒருவன் தங்களிடம் வந்து, காட்டிக் கொடுப்பதாகக் கூறியதும், இயேசுநாதரைக் கைது செய்வது இனி எளிது என்ற முடிவுக்கு யூத குருமார்கள் வந்தார்கள்.

ஆகவே அதற்கான ஏற்பாட்டைத் தாமதியாது செய்யத் தொடங்கினார்கள். மக்களிடையே செல்வாக்குள்ள ஒரு மனிதரைக் கைது செய்து தண்டிப்பது என்றால், அது எளிதில் நடக்கும் காரியமும் அன்று. எனவேதான்

பட்டப்பகலில் கைது செய்யாமல், இரவில் இயேசுநாதரைக் கைது செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

யூதர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். பிரதான குருவின் மாளிகைக்குத் திரும்பி, யூதாஸின் வரவை எதிர்பார்த்து ஆவலோடு காத்து இருந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தபடி யூதாஸும் வந்து சேர்ந்தான். அவனோடு ரோமானியக் காவல் படை வீரர் அறுவரையும், கோயில் சிப்பந்திகள் சிலரையும் அனுப்பினார்கள். கத்தி, தடிகள், தீவர்த்தி, கயிறு, விளக்கு ஆகியவற்றை எடுத்துக்கொண்டு, இரவு நேரத்தில் ஜெத்சமணித் தோட்டத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

இயேசுநாதர் அடிக்கடி இந்த ஜெத்சமணித் தோட்டத்துக்குச் சென்று, இரவு நேரத்தில் தியானம் செய்வது வழக்கம். யூதாஸுக்கும் இது தெரியும். ஆகவேதான் வீரர்களை அழைத்துக்கொண்டு, ஜெத்சமணித் தோட்டத்தை நோக்கி யூதாஸ் புறப்பட்டான்.

வழி நெடுகிலும் காவல் படையினரும் கோயில் சிப்பந்திகளும் என்ன விபரீதம் நேருமோ என்ற அச்சத்துடன் பயந்து சென்றார்கள்.

இரவில் வழி நடந்து நடந்து, ஜெத்சமணித் தோட்டத்தை அவர்கள் அடைந்தார்கள்.

''நான் ஒருவரை முத்தமிடுவேன். அதை அடையாளமாகக் கொண்டு, அவர்தான் இயேசு என்பதைத் தெரிந்துகொண்டு, அவரை நீங்கள் கைது செய்யுங்கள்'' என்று சொல்லி, யூதாஸ் அவர்களை அழைத்துச் சென்றான்.

அவர்கள் எல்லோரும் ஜெத்சமணித் தோட்டத்தை அடைந்த சமயம், தன் சீடர்களை உறக்கத்திலிருந்து எழுப்பி, இயேசுநாதர் உரையாடிக்கொண் டிருந்தார்.

ஆட்களுடன் உள்ளே நுழைந்த யூதாஸ், இருட்டில் பன்னிருவர் இருப்பதைப் பார்த்தான். தாமதியாது சென்று, இயேசுநாதரை யூதாஸ் கட்டித் தழுவிக்கொண்டு, ''குருவே! வாழ்க!'' என்று வாழ்த்திவிட்டு, அவருடைய கன்னத்தில் முத்தமிட்டான்.

இப்படி அவன் செய்ததும், இயேசுநாதர் அவனைக் கவனித்தார்: ''நண்பனே! என்ன நோக்கத்தோடு இங்கு வந்திருக்கிறாய்?'' என்று மெதுவாகக் கேட்டார். பிறகு ''முத்தம் கொடுத்து, மனுமகனைக் காட்டிக் கொடுக்கும் பொருட்டா வந்தாய்?'' என்று கேட்டார்.

யூதாஸ் பதில் சொல்லாமல் மௌனமாய் நின்றான். தனக்குப் பின்னே வரும் ஆட்களை அவன் திரும்பிப் பார்த்தான்.

காவல் படையினர் முன்னே விரைந்து, ஒன்றும் புரியாமல் குழப்பத்துடன் அங்கும் இங்கும் திரும்பிப் பார்த்தார்கள்.



பரபரப்புடனும் குழப்பத்துடனும் அவர்கள் நிற்பதைக் கவனித்த இயேசுநாதர் சீடர்களை விட்டு அவர்களிடம் வந்து, ''நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''நாசரத்தைச் சேர்ந்த இயேசுவை'' என்று அவர்கள் பதில் சொன்னார்கள்.

''அது நான்தான்'' என்று கூறினார் இயேசுநாதர்.

இந்தப் பதிலைக் கேட்டதும், அருகே நின்றவர்கள் அதிர்ச்சியுற்றுத் தரையில் விழுந்துவிட்டார்கள்.

பிறகு மயக்கம் தெரிந்து அவர்கள் எழுந்து நின்றார்கள். இயேசுநாதர் அதே கேள்வியை மீண்டும் கேட்டார். காவல் படையினர் அதே பதிலைத் திரும்பவும் சொன்னார்கள். அதே விதமாய் மீண்டும் தரையில் விழுந்தார்கள்.

அதன் பேரில் இயேசுநாதர் அவர்களைப் பார்த்து, ''நான்

தான் இயேசு என்று உங்களிடம் சொன்னேனே! நீங்கள் என்னைத் தேடி வந்திருப்பின், மற்றவர்களை—அதாவது சீடர்களை—விட்டுவிடுங்கள்'' என்று சொன்னார்.

வந்தவர்கள் தாமதியாது, இயேசுநாதரைக் கைது செய்தனர்.

கைது செய்தனர்

இயேசுநாதரைக் கைது செய்தவர்கள் யார்? யூதாஸ் அழைத்து வந்திருந்த கோயில் சிப்பந்திகளா? அல்லது பாதுகாப்புக்காக வந்திருக்கும் ரோமானியக் காவல் படையினரா?

கோயில் சிப்பந்திகள்தான் இயேசுநாதரைக் கைது செய்தார்கள். ஏனெனில் பணக்காரர்களை அடுத்து வாழும் சிப்பந்திகள் எப்பொழுதும் பணக்காரர்களுக்கு உடந்தையாய் இருப்பார்கள்; அதிகாரிகளின் சிப்பந்திகள் அதிகாரிகளுக்கு உடந்தையாய் இருப்பார்கள்; கோயில் சிப்பந்திகள் குருமார்களுக்கு உடந்தையாய் இருப்பார்கள்.

கைது செய்து இருப்பதாகச் சொல்லி, இயேசுநாதரைப் பிடித்துக்கொண்டு, அவருடைய இரு கைகளையும் சேர்த்துக் கயிற்றைக் கொண்டு கட்டினார்கள் சிப்பந்திகள்.

இதைப் பார்த்ததும் பீட்டர் என்னும் சீடர் அளவற்ற சீற்றம் கொண்டார். வாளை எடுத்து வீசி, பிரதான குருவின் சிப்பந்தி மால்குஸ் என்பவனின் வலது காதைத் துண்டித்துவிட்டார்.

பீட்டரின் இந்த நடத்தையைக் கவனித்த இயேசுநாதர், அவரைக் கண்டித்து எச்சரித்தார். ''பீட்டர்! உனது வாளை உறையில் போடு. கத்தியை எடுப்பவர்கள், கத்தியாலே மடிவர் என்பதை நீ தெரிந்துகொள்; விரும்பினால் என் தந்தையின் உதவியை நான் நாடியிருக்க மாட்டேனா? கேட்டால் பன்னிரண்டு சேனைகளுக்கு அதிகமான வான தூதரை

எனக்கு உதவிசெய்ய என் தந்தை அனுப்ப மாட்டார் என்று நீ நினைக்கிறாயா?'' என்று கேட்டார்.

பிறகு காது அறுபட்ட சிப்பந்தியிடம் சென்று, தமது திருக் கரத்தால் அந்த இடத்தைத் தொட்டு, அவனுக்கு மீண்டும் காது உண்டாகச் செய்தார் இயேசுநாதர்.

இதன் பின்னர் அங்கே நின்ற கூட்டத்தினரை இயேசு நாதர் பார்த்தார். முக்கிய குருமார்களும், கோயில் சிப்பந்திகளும், மூப்பர்களும் அந்தக் கூட்டத்தில் இருந் தார்கள்.

இயேசுநாதர் அவர்களைப் பார்த்து, ''திருடனைப் பிடிக்க வருபவர்களைப்போல், கத்திகளையும் தடிகளையும் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறீர்களே? நாள்தோறும் உங்கள் நடுவில் நான் கோயிலில் இருந்தேனே! அப்போது என்னைப் பிடிக்க, நீங்கள் ஏன் உங்கள் கைகளை நீட்டவில்லை?'' என்று கேட் டார்.

''உங்கள் திறமையால் நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை. என் சொந்த விருப்பத்தின் பயனாய், என்னை நீங்கள் பிடிக்க நான் அனுமதித்தேன்'' என்னும் கருத்தில்தான் மேலே குறிப்பிட்டவாறு இயேசுநாதர் கேட்டார்.

சீடர்கள் ஒன்றும் புரியாது குழம்பி நின்றனர்.

வந்தவர்களோ, இயேசுநாதரைக் கைது செய்து, கை களில் கட்டுப்போட்டு, அவரை அழைத்துச் சென்றார்கள். சாதாரணமான ஒரு குற்றவாளியைப் போல, இயேசுநாதர் அவர்களோடு சென்றார்.

வீம்பு செய்யாமல் இயேசுநாதர் அவர்களுடன் செல் வதைப் பார்த்ததும், சீடர்களின் குழப்பமும் திகிலும் அதிக மாயின. மேலும் அங்கு நின்றால் என்ன விபரீதம் விளை யுமோ என்று அஞ்சி, அங்கிருந்து அவர்கள் ஓட்டம் பிடித் தார்கள்.

அப்போது சரியான இரவு நேரம். உலகத்தை இரட்சிக்க வந்த இயேசுநாதர், கைதியாகி, குற்றவாளி போல, கோயில் சிப்பந்திகளுடன் சென்றுகொண்டிருக்கிறார்!

இயேசுநாதர்

(வாழ்க்கை வரலாறு)

∴

வெளிப்படுத்திக்கொண்ட காலம்

∵

இறுதி மூன்று ஆண்டுகள்

(புனித வாரம்)

இயேசுநாதர்

(வாழ்க்கை வரலாறு)

முதல் விசாரணை

இயேசுநாதரைக் கைது செய்த சமயத்தில், ஜெருசலம் நகரில் பிரதான குருவாய் இருந்தவன் பெயர் கைபாஸ். பிரதான குருவாய் இருந்தபோதிலும், இவனுடைய மாமனார் அன்னாஸ் என்பவன் அதிக செல்வாக்குடன் இருந்தான். அதனால் தன் மாமனாரைக் கலந்துதான் கைபாஸ் எந்தக் காரியத்தையும் செய்வது உண்டு.

அன்னாஸ் குடும்பத்துக்கும் கைபாஸின் குடும்பத்துக்கும் உறவும் தொடர்பும் செல்வாக்கும் இருந்தபடியால், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொண்டு, இரு குடும்பத்தாரும், பொது மக்களை வஞ்சித்து வாழ்க்கை நடத்தி வந்தார்கள். தங்களைவிட்டு, பதவி நழுவிப் போய்விடாதபடி, எப்பொழுதும் அந்த இரு குடும்பத்தாரும் கண்ணுங் கருத்துமாய் இருந்து வந்தார்கள். அதற்காக எத்தகைய கொடுமையைப் புரியவும் அவர்கள் தயாராய் இருந்தார்கள்.

அன்னாஸைப் புறக்கணித்து, எதையும் செய்ய முடியாது என்ற ஒரு நிலை நிலவியபடியால், கைது செய்யப்பட்ட இயேசுநாதரை, முதலில், அன்னாஸிடம் அழைத்துச் சென்றார்கள்.

நடுநிசிக்குப் பின்னர் விசாரணை ஆரம்பம் ஆயிற்று. செல்வாக்கும் திறமையுமுள்ள அன்னஸ் விசாரிப்பது என்றும், அதன் பின்னர் சனதரீம் சபை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவது என்றும் தீர்மானித்துக்கொண்டு, பின்னர், அதன்படி விசாரணையைத் தொடங்கினார்கள்.

குற்றம் சாட்டித் தண்டிப்பதற்குத் தக்க சான்றை இயேசுநாதரின் வாய்மொழி மூலமே பெற்றுவிட்டால், தீர்ப்புக் கூறுவது எளிதாகலாம் என்று எண்ணி, அதற்கு ஏற்ற பல கேள்விகளை அன்னஸ் கேட்டான்.

இயேசுவை, அன்னஸ் விசாரணை செய்த சமயத்தில், ஜான் என்னும் சீடர் அருகே முற்றத்தில் இருந்தார். பிரதான குருவுக்கு அவர் அறிமுகமானவர் அதனால் விசாரணை நடக்கும் சமயத்தில் அவரை மட்டும் உள்ளே அனுமதித்தார்கள்; ஜானின் சிபாரிசின் பேரில் பீட்டரும் உள்ளே வந்திருந்தார்.

இயேசுநாதரைக் கைது செய்ததும், சீடர்கள் எல்லாரும் முதலில் சிதறி ஓடிவிட்டார்கள் அல்லவா? பிறகு ஜானும் பீட்டரும் தங்கள் கோழைத்தனத்தை நினைந்து வருத்த முற்று. கைது செய்து அழைத்துச் செல்லப்படும் இயேசு நாதருக்குப் பின்னே சென்றார்கள்.

அன்னஸ் கேட்ட கேள்விகளுக்கு இயேசுநாதர் அமைதி யாகப் பதில் சொன்னார்: ''நான் வெளிப்படையாகத்தான் போதனை செய்து இருக்கிறேன். அனைவரும் கூடும் தேவாலயத்திலும் சினகோக் சபைகளிலும் போதனை செய்து இருக்கிறேன். மறைமுகமாக எதையும் நான் பேசினது இல்லை. ஆகவே, என்னை ஏன் நீங்கள் கேட்கிறீர்கள்? நான் பேசியதைப்பற்றி மற்றவர்களிடம் கேட்டுப் பாருங்கள்'' என்று கூறினார்.

இயேசுநாதர் சொன்ன இந்தப் பதிலைக் கேட்டு, சேவகர் களில் ஒருவன் ஆத்திரம் அடைந்தவனாய், ''பிரதான குருவுக்கு இப்படியா நீ பதில் சொல்லுகிறாய்?'' என்று சொல்லி, இயேசுநாதர் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தான்.

இயேசுநாதர் அதைப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டார். ''நான் தீமை பயக்கும் வார்த்தைகளைக் கூறியிருந்தால், உண்மையானதையே சொன்னேன். அதற்காக என்னை அடிப்பது முறையா?'' என்று கேட்டார்.

அமைதியோடும் பொறுமையோடும் உறுதியோடும் இயேசுநாதர் சொன்ன பதிலைக் கேட்டு, முன்னாள் பிரதான குரு அன்னாஸ் அதிக ஆத்திரம் அடைந்தான். மேலும் விசாரணை நடத்துவதற்கு அன்னாஸ் பிரியப்படவில்லை.

''சனதரீம் சபையினர் இனி விசாரிக்கட்டும்'' என்று கூறி, இயேசுநாதரை அங்கே அழைத்துப் போகும்படி சொன்னான்.

அதன்படி சிப்பந்திகளும், காவல் படையினரும், இயேசுநாதரைச் சனதரீம் சபைக்கு அழைத்துப் போனார்கள்.

* * *

முதல் விசாரணையே இப்படி ஒரு கேலிக்கூத்தாக நடந்து இருப்பது கவனிக்கத்தக்கது. எந்த விசாரணையும் பட்டப் பகலில் பகிரங்கமாக நடத்துவதுதான் முறையேயன்றி, நடு நிசியில் விசாரிப்பது முறையற்ற நடைமுறை; இது முதல் தவறு.

யூத முறைப்படி சனரீதம் சபைக்குத்தான் விசாரணை செய்து தீர்ப்புக் கூறும் அதிகாரம் உண்டேயன்றி, பிரதான குருவுக்கு உரிமை கிடையாது. அப்படி இருக்கும்போது, இயேசுநாதரை அன்னாஸிடம் அழைத்துப் போனது இரண்டாவது தவறு.

''முதல் கோணல், முற்றும் கோணல்'' என்பது பழமொழி. ஆரம்பத்திலேயே நீதிக்குப் புறம்பாய் நடப்பவர்களிடம், நேர்மையையும் நீதியையும் நாம் எதிர்பார்க்க முடியுமா?

இரண்டாம் விசாரணை

செல்வாக்கு மிகுந்தவனாய் இருந்தபோதிலும், தீர்ப்புக் கூறித் தண்டிக்கும் அதிகாரம் தனக்கு இல்லாதபடியால்,

மீண்டும் விசாரணை செய்து தண்டிப்பதற்காக, இயேசுநாதரை, சனதரீம் சபைக்கு அன்னாஸ் அனுப்பிவைத்தான்.

சனதரீம் சபை என்பது யூதர்களின் மத சம்பந்தமான முக்கிய சபை என்பதையும், மத சம்பந்தமான வழக்குகளை, விசாரித்துத் தீர்ப்புக் கூறும் அதிகாரத்தை ரோம ஆட்சியாளர்கள் அந்தச் சபைக்குக் கொடுத்திருந்தார்கள் என்பதையும் நாம் இங்கு நினைவுபடுத்திக்கொள்வது அவசியம் ஆகும்.

சனதரீம் சபைக்குத் தலைவராய் இருப்போரே பிரதான குருவாய் இருப்பது வழக்கம் இப்பொழுது இந்தச் சபைக்கு கைபாஸ் என்பவன் தலைவனாய் இருந்தான். இவன் அன்னாஸ் என்பவனின் மருமகன். கொடிய சிந்தையும் அகந்தையும் கொண்டவன். கோயிலை வியாபாரச் சந்தையாக்கி, அதன் மூலம் மக்களை வஞ்சித்து வருவாய் தேடி, வாழ்க்கை நடத்தியவன்; கல்வியையும் அறிவையும் தன்னலத்துக்காக, பயன்படுத்தியவன்

இயேசுநாதரை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதற்காக, சனதரீம் சபையைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள், கைபாஸ் மாளிகையில் கூடி இருந்தார்கள்.

இயேசுநாதர் அங்கே அழைத்து வரப்பட்டார். விசாரணையை நடத்தி, இரவோடு இரவாய்க் காரியத்தை முடித்துவிட வேண்டும் என்று சனதரீம் சபையினர் கருதினார்கள்.

மற்ற சீடர்களைப்போல், தாங்களும் முதலில் பயந்து ஓடிய போதிலும், பீட்டரும் ஜானும் சிறிது தைரியம் அடைந்து இயேசுநாதரைத் தொடர்ந்து சென்றார்கள். அன்னாஸ் என்ற குரு வீட்டில் விசாரணை நடந்தபோது, அருகில் ஜான் என்னும் சீடர் மட்டும்தான் இருந்தார்.

அதேபோல இப்பொழுதும் சனதரீம் சபை விசாரணை நடத்தும்பொழுது, ஜான் அருகில் இருந்தார். பீட்டர் வெளியே நின்றார்.

உள்ளே விசாரணை ஆரம்பமாயிற்று; பெயரளவுக்கு

விசாரணை நடத்தி, தீர்ப்புக் கூறும் எண்ணத்துடன்தான் அவர்கள்கூடி யிருந்தார்கள்.

சம்பிரதாயத்துக்கு ஏற்பத் தண்டிக்க வேண்டுமாயின், அதற்குச் சாட்சிகள் இருப்பது அவசியம். ஆகவே, இரு பொய்ச் சாட்சிகளைத் தயார் செய்து வைத்திருந்தார்கள்.

அந்தச் சாட்சிகள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் முரணுகச் சாட்சி கூறினுர்கள்.

''இவன் கோயிலை இடிப்பதாகச் சொன்னுன்'' என்று ஒருவன் சாட்சி சொன்னுன்.

''மூன்றே நாளில் கோயிலை எழுப்பித் தருவதாக இவன் சொன்னுன்'' என்றுன் மற்றவன்.

ஒருவன் கூற்றுப்படி கோயிலை இடிப்பது குற்றத்தின்பாற் படலாம்; ஆனுல், கோயிலை எழுப்பித் தருவது குற்றத்தின் பாற்படாது. ஆகவே, ஒன்றும் புரியாது யூத குருமார்கள் சிறிது நேரம் திகைத்தனர்.

பிறகு, பிரதான குரு கைபாஸ் எழுந்து நின்று இயேசு நாதரைப் பார்த்து, ''இந்த இரு சாட்சிகளும் உனக்கு எதிராகக் கூறுவதை நீ கேட்டாய் அல்லவா? இதுபற்றி நீ என்ன சொல்ல விரும்புகிறுய்?'' என்று கேட்டான்.

இயேசுநாதர் பதில் சொல்ல விரும்பாமல் மௌனமாய் இருந்தார்.

இதைக் கவனித்த பிரதான குரு சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான் பிறகு இயேசுநாதரைப் பார்த்துத் திறமையாக ஒரு கேள்வியை அவன் கேட்கத் தொடங் கினுன். ''ஆண்டவன் பெயரால் உன்னை ஒன்று கேட்கிறேன். அதற்காவது நீ பதில் சொல்; நீ ஆண்டவன் புதல்வன் என்பது உண்மைதானு?'' என்று கேட்டான்.

இதன்பேரில் இயேசுநாதர், ''நீங்கள் சொல்லும் கடவுள் குமாரன் நானே! இறைவனுடைய வலது பக்கத்தில் அமர்ந்து, மேகங்களின் மேல் சஞ்சரிப்பதை நீங்கள் காண் பீர்கள்'' என்று சொன்னுர்.

• இயேசுநாதர் சொன்ன இந்தப் பதிலைக் கேட்டதும் சனதரீம் சபையினர் ஆத்திரம் அடைந்தனர்.

''தெய்வ நிந்தனை! தெய்வ நிந்தனை!'' என்று பிரதான குரு கூக்குரலிட்டான். ''இனி என்ன சாட்சி தேவை? இவன் சொன்ன தேவ நிந்தனையை நீங்கள் செவிமடுத்தீர்களே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''மரண தண்டனை விதிக்க வேண்டியதுதான்! மரண தண்டனை விதிக்க வேண்டியதுதான்!'' என்று ஏக குரலில் அனைவரும் கூச்சலிட்டார்கள்.

ஆகவே சனதரீம் சபையினர், இயேநநாதருக்கு மரண தண்டனை விதித்தார்கள். சபைக் காவற்காரர்களிடம் இயேசுநாதரை ஒப்படைத்து விட்டு, அவர்கள் கூட்டத்தைக் கலைத்துவிட்டார்கள்.

பீட்டரின் மறுதலிப்பு

உள்ளே விசாரணை நடந்துகொண் டிருந்தது. வெளியே முற்றத்தில் காவற்காரர்களும் வேலைக்காரர்களும் குளிர் காய்ந்துகொண் டிருந்தார்கள், பீட்டரும் அவர்களோடு கலந்துகொண்டார்.

அவரைக் கைபாஸின் பணிப் பெண்களில் ஒருத்தி பார்த்துவிட்டாள். அவள் பீட்டரைப் பார்த்து, ''நீயும் இயேசுவின் சீடர்களில் ஒருவன்தானே?'' என்று கேட்டாள்.

பணிப் பெண் இவ்வாறு கேட்டதும் பீட்டர் பயந்து போனார். ''ஆம்'' என்று ஒப்புக்கொண்டால், தன்னையும் கைது செய்து தண்டித்து விடுவார்கள் என்று அஞ்சினார். ஆகவே அவர் அந்தப் பணிப் பெண்ணிடம், ''இயேசுவா! அவரை எனக்குத் தெரியாதே! நான் அவருடைய சீடனும் அல்லவே!'' என்று ஒரு பொய்யைச் சொன்னார்.

சிறிது நேரத்துக்குப் பின் வேறொருத்தி பீட்டரை நோக்கி, ''நீயும் இயேசுவின் சீடர்களில் ஒருவன்தானே?'' என்று காவற்காரர்களின் காதுகளில் விழும்படி இரைந்து கேட்டாள்.

பணிப்பெண் இரைந்து பேசியதும் புதிதாக வந்திருக்கும்

ஆளைக் காவற்காரர்கள் பார்த்தார்கள். வெளிச்சத்தில் கவனித்தபோது, வந்திருப்பவன் தங்களைச் சேர்ந்தவன் அல்லன் என்பதைக் காவற்காரர்கள் தெரிந்துகொண் டார்கள்.

"நீ, இயேசுவின் சீடர்களில் ஒருவன்தானா?" என்று வேலைக்காரி மீண்டும் நச்சரித்தாள்.

பீட்டர் திடுக்கிட்டார். பதில் சொல்லி மறுக்காவிட் டால் ஆபத்து என்று நினைத்த அவர், "அந்த மனிதரை எனக்குத் தெரியாதே!" என்று மீண்டும் மறுத்துச் சொன்னார்.

பிறகு உள்ளே என்ன நடக்கிறது என்பதை மாளிகையின் வாயில் அருகே நின்று பீட்டர் கவனித்தார்.

அப்போது வேலைககாரர் சிலர் அங்கே வந்தார்கள். பீட்டருடைய தோற்றமும் பேச்சும் வேறு விதமாய் இருந்த தால், தங்கள் பகுதியைச் சேர்ந்தவன் இல்லை எனபதை அவர்கள் தெரிந்துகொண்டார்கள். ஆகவே, அவரை அணுகி, "நீ இயேசுவின் சீடர்களில் ஒருவன் தான் என்பதில் சந்தேகம் இல்லை உன்னைப் பார்த்தால் கலிலேயன்போல் தோன்று கிறது. உனது பேச்சும் அப்படித்தான் இருக்கிறது. ஆகை யால் உண்மையைச் சொல்" என்று அதட்டினார்கள்.

என்ன பதில் சொல்வது என்று பீட்டர் திகைத்தார்.

இது சமயம் இன்னொரு மனிதன் அங்கே வந்தான். ஜெத்சமனித் தோட்டத்தில் காது அறுபட்ட அந்த ஆள் பீட்டரை இனம் தெரிந்துகொண்டான். "உன்னை நான் ஜெத்சமனித் தோட்டத்தில் பார்த்தேனே! அப்போது நீ இயேசுவுடன்கூட இருந்தாயே!" என்று கூவினான்.

பீட்டர் மீண்டும் திகைத்தார். பதில் சொல்லாமல் இருந்தால் ஆபத்து என்ற முடிவுக்கு வந்த அவர், "அந்த இயேசுவை எனக்குத் தெரியாதே! இயேசுவை என் ஆயுளிலே நான் பார்த்தது கிடையாதே!" என்று மூன்றாவது முறை யாக உறுதியுடன் மறுத்துச் சொன்னார்.

அப்படி அவர் சொன்னபோது, கோழி ஒன்று கூவிற்று.

இது சமயம் இயேசுநாதரை, அந்த வழியாக அழைத்து

வருவதைப் பீட்டர் பார்த்தார். விசாரணை முடிந்து, கொட்டடியில் அடைக்க அவரை அழைத்துப் போய்க் கொண்டிருந்தார்கள்.

இந்தக் காட்சியைப் பார்த்ததும் பீட்டர் அதிர்ச்சி அடைந்து போனார். ''பொழுது விடிவதற்குள் என்னை நீ மூன்று முறை மறுதலிப்பாய்'' என்று இயேசுநாதர் கூறியது அவர் நினைவுக்கு வந்தது.

நெஞ்சம் வெடித்துவிடுவதுபோல், பீட்டர் வேதனை அடைந்தார். அந்த இடத்தில் நிற்கப் பிரியப்படாது, வேறு ஒரு இடத்துக்குக்குச் சென்று, தான் செய்த தவறை நினைந்து தேம்பித் தேம்பி அழுதார்.

யூதாஸின் முடிவு

இயேசுநாதரின் முக்கிய சீடர்கள் பன்னிருவர் என்பதையும் அவர்களில் யூதாஸும் ஒருவன் என்பதையும் நாம் அறிவோம். இவன் பணத்தாசையும் பதவியாசையும் பிடித்தவன் என்பதையும் அவற்றின் பொருட்டாகவே இயேசுநாதரை அண்டி அவன் வாழ்ந்தான் என்பதையும் நாம் அறிவோம்.

பணத்தாசை வயப்பட்டு இயேசுநாதரை யூதாஸ் காட்டிக் கொடுத்தான். அதன் பயனாய் இயேசுநாதருக்கு, சனதரீம் சபையார் மரண தண்டனை விதித்து இருக்கிறார்கள் என்பது தெரியவந்ததும்,யூதாஸ்அதிர்ச்சியடைந்துபோனான். இத்தகைய ஒரு கொடிய தண்டனையைச் சனதரீம் சபையார் விதிப்பார்கள் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

மரண தண்டனை விதித்து இருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரியவந்ததும், தான் ஆசைவயப்பட்டு வாங்கிய முப்பது வெள்ளிக் காசுகளைக் கையில் எடுத்துக்கொண்டு யூத குருமார்களிடம் யூதாஸ் ஓடினான்.

தான் லஞ்சம் வாங்கிய பணத்தைக் கையில் வைத்துக் கொண்டிருப்பதே அவனுக்குப் பெரும் பாரமாக,பெரிய ஒரு பாவச் சுமைபோல் தோன்றிற்று. ஆகவே, தனக்கு லஞ்சம்

தந்தவர்களிடம் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க விரும்பி, ''குற்றமற்ற ஒருவரைக் காட்டிக் கொடுத்து, பாவம் செய்துவிட்டேன்'' என்ருன் யூதாஸ்.

''அதனுல் எங்களுக்கு என்ன? நீயே பார்த்துக்கொள்'' என்று ஏளனம் தொனிக்க யூத குருமார்கள் பதில் சொன்னுர்கள்.

இந்த ஏளனப் பதிலைக் கேட்டு, யூதாஸ் மனம் நொந்து வருந்தினன், வருந்தினனே யன்றி, தான் செய்த தவறுக்காக இயேசுநாதரிடம் மன்னிப்புக் கேட்க அவனுக்குத் துணிவு ஏற்படவில்லை.

ஆகவே, தான் லஞ்சம் வாங்கிய முப்பது பணத்தை, கோயிலின் முற்றத்தில் வீசி எறிந்தான்.

பிறகு வெளியே சென்று, ஒரு இடத்தில் தூக்கிலிட்டுக் கொண்டு யூதாஸ் இறந்து போனுன்.

காசாசை பிடித்தவனுக்கு இறுதியில் நல்ல முடிவு இராது என்பதை யூதாஸ் வாழ்க்கையிலிருந்து நாம் தெரிந்துகொள்கிருேம்.

அவமதிப்பு

சனதரீம் சபையில் நள்ளிரவில் தொடங்கிய விசாரணை முடிந்ததும், இயேசுநாதரைக் காவற்காரர்களிடம் சபையினர் ஒப்படைத்துவிட்டார்கள்.

கைபாஸின் மாளிகையில், கீழே ஒரு அறை இருந்தது. அந்த அறையில் இயேசுநாதரை அடைத்து வைத்து, பொழுது புலர்ந்ததும் மற்ற காரியங்களைக் கவனிக்கலாம் என்று சபையினர் முடிவுக்கு வந்தார்கள்.

அந்த முடிவுப்படி, கீழே இருக்கும் அறைக்கு இயேசுநாதரைக் காவற்காரர்கள் இழுத்துப் போனுர்கள்.

காவற்காரர்களுக்கு இயேசுநாதர்மீது அபாரமான கோபம். இந்த மனிதனுல்தானே இரவு முழுதும் நாம் தூங்காமல் இருக்க நேர்ந்தது என்று அவர்கள் ஆத்திரப்பட்

டார்கள். தங்களுக்குள்ள ஆத்திரத்தை அதிகாரிகளிடம் காட்ட முடியாதாகையால், அதைக் கைதியிடம் அவர்கள் காட்டத் தொடங்கினார்கள்.

முதலில் இயேசுநாதரை அவர்கள் திட்டினார்கள்; பழித்தார்கள்; சபித்தார்கள்; அவருடைய தலையில் குட்டினார்கள்; காறித் துப்பினார்கள். தங்களால் இயன்ற கொடுமைகளை எல்லாம் தயக்கமின்றி அவர்கள் செய்தார்கள்.

ஒரு காவற்காரன் ஒரு துணியை எடுத்து இயேசுநாதரின் இரு கண்களையும் கட்டினான். அவன் கட்டி முடித்ததும், மற்றொரு காவற்காரன் அவரை அடித்துவிட்டு, ''தீர்க்கதரிசியே! இப்போது உன்னை அடித்தவன் யார்? சொல்லு பார்க்கலாம்'' என்று குறும்பாகக் கேட்டான்.

தங்களுக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்படும்வரை காவற்காரர்கள் இயேசுநாதரைப் பலவாறு அவமதித்தார்கள். பிறகு கைசோர்ந்து, வாய் சோர்ந்து. மனம் சோர்ந்து, அவர்கள் அனைவரும் அயர்ந்து தூங்கிவிட்டார்கள்.

சிறியோர் செய்த இந்தப் பிழைகளை எல்லாம், இயேசுநாதர் பொறுமையுடன் சகித்துக்கொண்டார்.

பிலாத்து செய்த விசாரணை

மறு தினம் வெள்ளிக்கிழமை யன்று பொழுது நன்றாகப் புலர்ந்ததும், மீண்டும் சனதரீம் சபையினர் கைபாஸின் மாளிகையில் கூடினார்கள். முன் தினம் இரவு தாங்கள் செய்த முடிவுபற்றி மீண்டும் ஒரு முறை யோசனை செய்து, அந்த முடிவை உறுதிப்படுத்தினார்கள்.

அதன் பின்னர் அந்த முடிவை நிறைவேற்றுவதற்கான காரியங்களில் ஈடுபடலானார்கள்,

மரண தண்டனை விதித்தாயிற்று. இதை எப்படி நிறைவேற்றுவது ?

ஆத்திரத்தினால் மரண தண்டனையை விதித்தபோதிலும் அதைத் நிறைவேற்றி முடிக்கும் அதிகாரம் அவர்களுக்கு

இல்லை. அதை நிறைவேற்ற வேண்டுமாயின், ரோம அதிகாரியின் அனுமதியை யூத குருமார்கள் பெற வேண்டும்.

ஆகவே இயேசுநாதரையும் அழைத்துக்கொண்டு, அன்று தலைமை ரோம அதிகாரியாய் இருக்கும் போஞ்சு பிலாத்திடம் யூத குருமார்கள் போனார்கள்.

பாஸ்கு விழா சமயமாதலால், தலைநகரில் கலகம் எதுவும் மூளாதபடி கண்காணித்துக்கொள்ள, பிலாத்து, ஜெருசலம் நகருக்கு வந்திருந்தான்.

இயேசுநாதரைக் கைது செய்து அழைத்துக்கொண்டு, யூத குருமார்களும் மக்களும் முற்றத்தில் வந்து நிற்பது தெரிந்து, பிலாத்து தாம் இருந்த இடத்தைவிட்டு வெளியே வந்து அவர்களைச் சந்தித்தான். "இந்த மனிதன் என்ன குற்றம் செய்தான்? எதற்காக இவனை என்னிடம் இழுத்து வந்திருக்கிறீர்கள்?" என்று பிலாத்து கேட்டான்.

இந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், "குற்றவாளியாய் இல்லாவிட்டால் இவனை ஏன் நாங்கள் உம்மிடம் இழுத்து வருகிறோம்?" என்று யூத குருமார்கள் சொன்னார்கள்.

"குற்றவாளியாயின், உங்களுக்கு இருக்கும் அதிகாரத்தைக்கொண்டே இவனை நீங்கள் தண்டிப்பதுதானே?" என்று கேட்டான் பிலாத்து.

"தண்டிக்க நாங்கள் தீர்மானம் செய்துவிட்டோம். இவனுக்கு நாங்கள் மரண தண்டனை விதித்து இருக்கிறோம். அதை நிறைவேற்றுவதற்கு உம்மிடம் அனுமதி பெற வந்தோம்" என்று யூத குருமார்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

யூதர்கள் இவ்வாறு கூறியதும், பிலாத்து சிறிது யோசித்தான். பிறகு யூத குருமார்களைப் பார்த்து, "மரண தண்டனை விதிப்பதற்குரிய குற்றத்தை இவன் செய்து இருக்கிறானா? அப்படி இவன் செய்த பெரும் குற்றம் என்ன?" என்று வினவினான் பிலாத்து.

"இவன் மக்களிடையே கலகத்தை உண்டாக்குகிறான். சீசர் சக்ரவர்த்திக்கு வரி செலுத்த வேண்டாம் என்று

கூறுகிறான். தன்னையே அரசன் என்று கூறிக்கொள்கிறான்'' என்று யூத குருமார்கள் சொன்னார்கள்.

அவர்கள் சொன்ன இந்தப் பதிலைக் கேட்டு, பிலாத்து வியப்படைந்தான். ரோமர்களின் ஆட்சிக்கு இதுவரை எதிர்ப்புக் காட்டிவந்த யூதப் பிரமுகர்கள் இப்பொழுது அந்த ஆட்சிக்குச் சாதகமாகப் பேசுவதைக் கண்டு, பிலாத்தின் உள்ளத்தில் சந்தேகம் ஏற்படலாயிற்று. இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கிறது என்று அவன் நினைத்தான்.

''கலகம் செய்கிறான்; ரோம அரசுக்கு வரி செலுத்த வேண்டாம் என்று கூறுகிறான்'' என்று இயேசுநாதர்மீது யூத குருமார்கள் சாட்டிய குற்றங்களைப் பிலாத்து நம்பவில்லை. ஆயினும் ''தன்னை அரசன் என்று இவன் கூறுகிறான்'' என்னும் குற்றச்சாட்டைப்பற்றிச் சிறிது சிந்தித்தான்.

''அரசன் என்று கூறிக்கொள்பவனை விசாரியாது அனுப்பிவிட்டால், அதற்காக ரோமானியச் சக்கரவர்த்தி தன்மீது சந்தேகப்படக் கூடும். ஆகவே யூதர்கள் குற்றம் சுமத்தும் ஆளை இரண்டொரு கேள்வியைக் கேட்டு உண்மை நிலையைத் தெரிந்துகொள்ளலாம்'' என்ற முடிவுக்கு வந்தான் பிலாத்து.

ஆகவே, விசாரணை நடத்தும் இடத்துக்குப் பிலாத்து மீண்டும் வந்தான். இது சமயம் இயேசுவை அந்த இடத்துக்கு அழைத்து வந்தார்கள். குற்றம் சுமத்திய யூதத் தலைவர்கள் வெளியே நின்றார்கள்.

இயேசுவைப் பார்த்ததும் பிலாத்து அவரை நோக்கி, ''நீ யூதர்களின் மன்னனா?'' என்று கேட்டான்.

அதற்கு இயேசுநாதர் பிலாத்திடம், ''இந்தக் கேள்வி தாங்களாகக் கேட்டதா? அல்லது பிறர் தங்களைக் கேட்கும்படி தூண்டியதா ?'' என்று கேட்டார்.

இப்படி இயேசுநாதர் கேட்டதும், பிலாத்து சிறிது கலக்கமடைந்தான். ''நான் யூதனா என்ன உங்கள் வேத நூல்களைப் படிப்பதற்கு! அவற்றைப் படிக்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. அக்கறையும் எனக்கு இல்லை. உன் இனத்தவரும் உன் இனத்தைச் சேர்ந்த முக்கிய குரு

மார்களும் உன்னை என்பால் ஒப்படைத்து இருக்கிறார்கள்? நீ என்ன குற்றம் செய்தாய்? அதை என்னிடம் சொல்'' என்று சற்று எரிச்சலுடன் கேட்டான்.

அதற்கு இயேசுநாதர் ''நான் போதிக்கும் அரசு இவ் உலகைச் சார்ந்தன்று. நான் செய்யும் போதனைகள் இவ்வுலகத்தைப்பற்றியதாக இருந்திருக்குமாயின், யூதர்களின் கையில் சிக்கிக்கொள்ளவிடாமல், என்னைப் பின்பற்றுவோர், இதுவரை சண்டை பிடித்து இருப்பார்கள். ஆகவே நான் போதிக்கும் அரசு இவ்வுலகத்தைச் சார்ந்தன்று'' என்று சொன்னார்.

இந்தப் பதிலைக் கேட்டு, பிலாத்து சிறிது வியப்படைந்தான். பிறகு அவரைப் பார்த்து, ''நீ அரசனா? அல்லவா? அதை மட்டும் சொல்'' என்று கேட்டான்.

நேரடியான இந்தக் கேள்விக்கு இயேசுநாதர் பதில் சொன்னார். ''நீங்கள் கூறுவதுபோல் நான் ஒரு அரசன் அல்லன். ஆயினும் உண்மைக்காகப் பிறந்தவன் நான், உண்மைக்குச் சான்று கூறவே நான் வந்தேன். என்னைச் சார்ந்தவன் நான் கூறுவதை ஏற்று நடப்பான்'' என்று கூறினார்.

இதைக் கேட்டுக் கலக்கமடைந்த பிலாத்து, ''உண்மை என்பது என்ன?'' என்று குறுக்கிட்டு முரட்டுத்தனமாக ஒரு கேள்வியைக் கேட்டான்.

பிறகு பதிலுக்குக் காத்திராமல் வெளியே நிற்கும் யூதர்களிடம் வந்து ''இந்த மனிதனிடம் குற்றம் எதையும் நான் காணவில்லை'' என்று சொன்னான்.

இதைக் கேட்டதும் சனதரீம் சபையைச் சேர்ந்தவர்கள் பெரிதும் ஆத்திரம் அடைந்தார்கள். ''இவன் பொல்லாத கலகக்காரன்; கலிலேயா தொடங்கி, யூதேயா முழுதும் போதனைகள் செய்து, இவன் கலகத்தை உண்டுபண்ணுகிறான்!'' என்று அவர்கள் கூக்குரலிட்டார்கள்.

என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றாது பிலாத்து திகைத்தான். குற்றம் செய்யாத இயேசுவைத் தண்டிக்க அவன் மனம் ஒப்பவில்லை. தண்டிக்காவிட்டால் யூதப்

பிரமுகர்கள் கிளர்ச்சி செய்வார்கள்போல் தோன்றியது. என்ன செய்வது என்று அவன் திண்டாடியபோது, ''இவன் கலிலேயன்'' என்று யூதப் பிரமுகர்கள் கூறியது பிலாத்தின் நினைவுக்கு வந்தது. ஆகவே அவன் யூதப் பிரமுகர்களை நோக்கி, ''இவன் கலிலேயனா?'' என்று கேட்டான் பிலாத்து.

''ஆம். கலிலேயன்தான்'' என்று யூதப் பிரமுகர்கள் பதில் சொன்னார்கள்.

''அப்படியானால் இவனை விசாரித்துத் தீர்ப்புக் கூற வேண்டியவர், கலிலேயாப் பிரதேசத்தை ஆளும் ஏரோது ஆந்திப்பாஸ். ஆகவே அவரிடம் நீங்கள் போங்கள்'' என்று சொல்லிவிட்டு, பிலாத்து உள்ளே போய்விட்டான்.

ஏரோது பரிகசித்தான்

கலிலேயாப் பிரதேசத்துக்கு அதிகாரியாய் இருக்கும் ஏரோது ஆந்திப்பாஸ் என்பவனும், பாஸ்கு விழாவுக்காக ஜெருசலம் நகருக்கு வந்திருந்தான்.

இவனும், யூதேயாப் பகுதிக்கு அதிகாரியாய் இருக்கும் போஞ்சு பிலாத்தும், ரோமானிய வல்லரசுக்கு உட்பட்ட பிரதேச அதிகாரிகள் ஆவர். இந்த இருவருக்கும் இடையில் நேசமனப்பான்மை நிலவவில்லை.

இருந்தும் பிரபலமான வழக்கு ஒன்றைத் தன்னிடம் பிலாத்து அனுப்பியது குறித்து, ஏரோது ஆந்திப்பாஸ் பெருமிதம் அடைந்தான். புகழ் பெற்ற இயேசுவைக் காண்பதற்கு அவன் பெரு மகிழ்ச்சி அடைந்தான். ஏதாவது புதுமைகள் புரிவதைக் காணலாம் என்ற ஆசை அவனுக்கு இருந்தது.

ஆகவே இயேசுநாதரைத் தன்பால் அழைத்து வந்ததும், அனேக கேள்விகளை ஏரோது ஆந்திப்பாஸ் கேட்டான்.

இயேசுநாதர் பதில் ஒன்றும் சொல்லாது மௌனமாக இருந்தார்.

யூதப் பிரமுகர்களும், குருமார்களும், இயேசுநாதர்மீது குற்றங்களைச் சுமத்தியவண்ணம் இருந்தனர். ''கலகக்காரன், தெய்வ நிந்தனை செய்பவன், ஆசாரங்களை அழிப்பவன், கோயிலை இடிப்பதாகச் சொன்னான்'' என்று எல்லாம் கூறி இயேசுநாதர்மீது குற்றம் சுமத்தினர்.

இயேசுநாதர் குற்றமற்றவர் என்பதையும் பகைமையாலும் வெறுப்பாலும் யூதப் பிரமுகர்கள் இயேசுமீது குற்றம் சுமத்துகிறார்கள் என்பதையும் ஏரோது தெரிந்து கொண்டான்.

ஆகவே, இயேசுவைத் தண்டிக்கத்தக்க குற்றம் எதையும் அவரிடம் காணவில்லை ஆயினும் தண்டிக்காமலும் திருப்பி அனுப்ப அவன் அகந்தை இடம் தரவில்லை. ஆகவே, இண்டலும் கேலியும் செய்து அவரை எள்ளி நகையாட முயன்றான் அந்தக் கயவன். பளபளப்பான பழைய வெள்ளை ஆடை ஒன்றை இயேசுநாதருக்கு அணிவித்து, ''பைத்தியக்காரன்!'' என்று பட்டம் சூட்டி, பிலாத்திடம் திருப்பி அனுப்பி வைத்தான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், ஏரோது ஆந்திப்பாஸும் போஞ்சு பிலாத்தும், தத்தம் பகைமையை மறந்து நண்பர்கள் ஆயினர்.

யூத குலப் பிரமுகர்களோ எப்படியாவது இயேசுநாதரைத் தண்டித்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்துடன் பிலாத்திடம் வந்தனர்.

சிலுவையில் அறையுங்கள்

இயேசுநாதரை மீண்டும் தம்மிடம் விசாரணைக்கு அழைத்து வந்திருப்பதைப் பார்த்து, பிலாத்து கலக்கமடைந்தான். யூதப் பிரமுகர்களின் பிடிவாதப் போக்கு அவனுக்கு எரிச்சலை உண்டாக்கிற்று. ஆகவே அவன் யூதப் பிரமுகர்களை நோக்கி, ''மரண தண்டனை விதிப்பதற்குரிய குற்றம் எதையும் இந்த மனிதன் செய்திருப்பதாக நானும்

கருதவில்லை. ஏரோது ஆந்திப்பாஸும் அப்படித்தான் கருதுகிறார். ஆகவே பெயரளவுக்கு இவனைத் தண்டித்து விட்டு, இவனுக்கு விடுதலை அளிக்கப் போகிறேன்'' என்று கூறினான்.

இயேசுநாதரைத் தண்டிக்க, சட்டம் இடம் தரவில்லை என்ற போதிலும், யூதப் பிரமுகர்களின் பிடிவாதத்தைப் பிலாத்தினால் புறக்கணிக்க முடியவில்லை. ஆகவே கசை அடி கொடுத்து, இயேசுவை விடுவித்துவிடலாம் என்ற எண்ணத் துடன்தான் பிலாத்து முதலில் இவ்வாறு சொன்னான்.

பிறகு அவன் உள்ளத்தில் மற்றொரு எண்ணமும் தோன்றிற்று. பாஸ்கு விழாவின்போது யூதப் பிரமுகர் களின் விருப்பத்துக்கு இணங்க, குற்றவாளி ஒருவனுக்கு விடுதலை வழங்குவது வழக்கம். அந்த வழக்கத்துக்கு இசைய இயேசுநாதருக்கு விடுதலை அளித்துவிட்டால், நீதிக்குப் புறம்பாகத் தண்டனை விதிப்பதிலிருந்து தாம் தப்பித்துக் கொள்ளலாம் என்று கருதினான்.

அந்தக் காலத்தில் பிரபலமான கொள்ளைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் பெயரைக் கேட்டாலே, மக்கள் பயந்து நடுங்குவர். பரபாஸ் என்பது அவன் பெயர். இவர்களில் யாருக்கு விடுதலை வழங்கலாம் என்று கேட்டால் மக்கள் இயேசுவுக்கே விடுதலை வழங்க வேண்டும் என்று கூறுவர். ஆகவே தன் காரியம் எளிதாகிவிடும் என்று பிலாத்து எண்ணினான்.

எனவே, முற்றத்துக்கு வந்து பொது மக்களையும் யூதப் பிரமுகர்களையும் நோக்கி, ''வழக்கப்படி ஒரு குற்ற வாளியை விடுவிக்க வேண்டுமே? யாரை விடுவிக்கலாம்? இயேசுவையா? அல்லது பரபாசையா?'' என்று கேட்டான்.

''பரபாசையா! வேண்டவே வேண்டாம்'' என்று பொது மக்கள் சொல்ல வாயெடுத்தனர்.

அதற்குள் பிரமுகர்கள் குறுக்கிட்டு, ''பரபாசுக்கு விடுதலை வழங்குங்கள்!'' என்று குரல் எழுப்பினர்.

தலைவர்கள் குரல் எழுப்பியதைப் பார்த்ததும் பொது மக்களும் அவர்களோடு சேர்ந்துகொண்டு ''பரபாசுக்கு

விடுதலை வழங்குங்கள்'' என்று சேர்ந்து கூவினர்.

தான் எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறாக மக்கள் கூவு வதைக் கண்டு, பிலாத்து திடுக்கிட்டான். பிறகு கூட்டத் தினரைப் பார்த்து, ''அப்படியானால் கிறிஸ்து என்று அழைக்கப்படும் இந்த இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான் பிலாத்து.

''அவனைச் சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்'' என்று கூட்டத்தில் இருந்தவர்கள் கத்தினார்கள்.

''அவன் என்ன குற்றம் செய்தான்?'' என்று மீண்டும் கேட்டான் பிலாத்து.

கேட்ட கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், ''சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்! சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்!!'' என்று மீண்டும் மீண்டும் கூட்டத்தில் இருந்தவர்கள் கூக்குரலிட்டார்கள்.

குருமார்களும் கூட்டத்தினரும் சேர்ந்து செய்யும் ஆர வாரத்தைக் கண்டு, பிலாத்து குழப்பமடைந்தான். ''குற்ற மற்ற ஒருவனைத் தண்டிப்பது நீதிக்குப் புறம்பாகும். தண்டிக் காவிட்டால் குருமார்கள் சும்மா இருக்க மாட்டார்கள். என் செய்வது?'' என்று யோசித்தான்.

பிறகு, ஏதோ ஒரு முடிவுக்கு வந்து, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொணரச் சொன்னான். கொணர்ந்து வைத்ததும் தமது கைகளை அந்தத் தண்ணீரில் கழுவிக்கொண்டான் பிலாத்து. பிறகு கூட்டத்தினரைப் பார்த்து, ''குற்றமற்ற இந்த மனிதரைக் கொல்வதனால் சிந்தும் இரத்தத்துக்கு நான் பொறுப்பாளி அல்லன்; அதற்கு நீங்களே பொறுப்பாளி ஆவீர்கள்!'' என்று சொல்லி, இயேசுநாதரைச் சிலுவையில் அறைவதற்கு உத்தரவு கொடுத்துவிட்டான் பிலாத்து.

தன் மனதுக்கு ஒவ்வாத, நீதிக்குப் புறம்பான காரியத் தைப் பிறரின் வற்புறுத்தலுக்காக ஒருவன் செய்ய நேர லாம் என்பதற்கு, பிலாத்தின் நடத்தை சரியான ஒரு எடுத்துக்காட்டு.

தண்டனைப் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்குப் பிலாத்து ஏதோ செய்தான். அது இயலுகிற காரியமா?

மரண தண்டனை விதிக்கப் பெற்றவர்களைக் கசையால் அடித்துத் துன்புறுத்துவது ரோமர்களின் பழக்கம். ஆகவே, அந்த முறைப்படி கசையடி கொடுக்கும் பொருட்டு, சிப்பந்திகள் இயேசுநாதரை அப்பால் இழுத்துச் சென்றார்கள்.

குறிப்பிட்ட இடத்தை அடைந்து, இயேசுநாதரின் மேனிமீது கிடந்த உடையை அகற்றினார்கள். பிறகு, அவரை இழுத்துப் போய் ஒரு தூணோடு சேர்த்துக் கட்டிப் போட்டார்கள். பயங்கரமான சாட்டையைக் கொண்டு, இயேசுநாதரை அந்த முரடர்கள் மாறி மாறி அடித்தார்கள்.

இயேசுநாதரின் திரு மேனி நடுங்கிற்று; உடலில் காயங்கள் ஏற்பட்டு ரத்தம் குபுகுபு வென்று கொட்டிற்று; தங்கள் கை சோர்ந்து அலுத்துப் போகும்வரை, இயேசுநாதரை அந்த முரடர்கள் அடித்தார்கள்.

இந்தக் கொடுமையோடு மட்டும் சிப்பந்திகள் நிறுத்தவில்லை. கேலி செய்து எள்ளி நகையாடி, அவரை அவமானப் படுத்தவும் அவர்கள் தயங்கவில்லை.

அடிபட்டுக் காயங்களுடன் இருந்த இயேசுநாதரை மற்றொரு இடத்துக்கு இழுத்துப் போய், ஒரு பீடத்தில் உட்கார வைத்தார்கள்; அந்தப் பீடத்தைச் சிம்மாதனம் என்று சொன்னார்கள். அரசனுக்கு உரிய அங்கி என்று சொல்லி, ஒரு சிவப்பு ஆடையை இயேசுநாதர்மீது போட்டார்கள்; முட்கள் நிறைந்த கொம்புகளை வளையமாகச் செய்து, அதை முடி என்று சொல்லி, இயேசுநாதர் தலைமீது சூட்டினார்கள்; செங்கோல் என்று சொல்லி, ஒரு மூங்கில் கழியை அவர் கையில் கொடுத்தார்கள். பிறகு, ''இதோ பாருங்கள்! யூதர்களுக்கு அரசனை!'' என்று சொல்லி, ஆர்ப்பரித்துக் கேலி செய்தார்கள். அவருடைய முகத்தில் காறி உமிழ்ந்துவிட்டுச் சிரித்தார்கள். ''யூதர்களுக்கு அரசர் வாழ்க! வாழ்க!'' என்று ஏளனம் செய்தார்கள். ஒவ்வொரு படைவீரனும் சிப்பந்தியும் இயேசுநாதருக்கு முன்னே வந்து முழந்தாள் படியிட்டு

வணங்குவான். பிறகு எழுந்து நின்று, அவருடைய முகத்தில் காறி உமிழ்வான். இப்படி அவமானப்படுத்தி, இயேசு நாதரை அவர்கள் துன்புறுத்தினார்கள்.

பகல் பதினொரு மணி இருக்கும். சித்திரவதை செய்து முடித்த பின்னர், அந்தக் கோலத்துடன் இயேசுநாதரை மீண்டும் இழுத்து வந்து, பிலாத்துக்கு முன்னே சிப்பந்திகள் நிறுத்தினார்கள்.

இயேசுநாதரின் துன்புற்ற நிலையைப் பார்த்ததும், மக்கள் அவர்மீது பரிவுகாட்டக் கூடும் என்று பிலாத்து நினைத்தான். ஆகவே, அவன் அவரை மக்களுக்குக் காட்டி, ''இதோ மனிதன்! இவன்மீது எவ்வித குற்றத்தையும் நான் காணவில்லை'' என்று சொன்னான். சிவப்பு ஆடையும் முள் முடியும் அணிந்திருக்கும் இயேசுவை அவர்களுக்குக் காட்டி, ''இந்த மனிதரைப் பாருங்கள்!'' என்று கூவினான் பிலாத்து.

கூட்டமாகக் கூடியிருந்த மக்களும் குருமார்களும் இயேசுநாதரிடம் இரக்கம் காட்டவில்லை. ''இவனைச் சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்! சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்!'' என்று ஓயாது கூக்குரலிட்டுக் கத்தினார்கள்.

இப்படி அவர்கள் கூச்சல் போடுவதைப் பார்த்ததும், பிலாத்துக்கு எரிச்சல் உண்டாயிற்று. ''வேண்டுமானால் நீங்கள் இவனை இழுத்துப் போய், சிலுவையில் அறைந்து கொல்லுங்கள். இந்த மனிதனிடம் எவ்வித குற்றமும் இல்லை'' என்று சொன்னான்.

தண்டனையை நிறைவேற்றாமல் பிலாத்து தட்டிக் கழிக்கப் பார்க்கிறான் என்பதை யூத மூப்பர்கள் தெரிந்து கொண்டனர். சும்மா இருந்தால் காரியம் கெட்டுவிடும் என்று கருதினர். ஆகவே, அவர்கள் பிலாத்திடம், ''எங்கள் சட்டப்படி நாங்கள் இவனுக்கு மரண தண்டனை விதித்து இருக்கிறோம். ஆயினும் அதை நிறைவேற்ற எங்களுக்கு அதிகாரம் கிடையாது. அதனால்தான் நாங்கள் உம்மிடம் வந்தோம். இவன் தன்னைக் கடவுள் புதல்வன் என்று கூறிக் கொள்கிறான்'' என்று கூச்சல் போட்டனர்.

''கடவுள் புதல்வன்!'' என்று தன்னைக் கூறிக்கொள்

கிறான் என்று யூத மூப்பர்கள் சொன்னதும், பிலாத்து பயந்து போனான். கடவுள் புதல்வன் என்று கூறிக்கொள்பவனைத் தண்டியாது விட்டுவிட்டால், கடவுள் தன்னைத் தண்டித் தாலும் தண்டிக்கக் கூடும் என்று பிலாத்து கலக்கமடைந் தான். உண்மையாகவே, கடவுள் புதல்வனுயின் தண்டிப்பது குற்றமாகுமே என்று கவலைப்பட்டான். ஆகவே, நேரில் கேட்டு உண்மையை வெளிக்கொணர எண்ணி, இயேசுவை நோக்கி "நீ எங்கிருந்து வந்தவன்?" என்று கேட்டான்.

தான் சொல்லும் பதிலைப் பிலாத்து அங்கீகரிக்க மாட் டான் என்ற எண்ணம் இயேசுநாதருக்கு இருந்தது. ஆகவே, பதில் ஒன்றும் சொல்லாது அவர் மௌனமாய் இருந்தார்.

இதனால் சிறிது கோபமடைந்த பிலாத்து, "ஏன் பதில் கூறுமல் இருக்கிறுய்? உன்னைச் சிலுவையில் அறையவோ, அல்லது உனக்கு விடுதலை வழங்கவோ, எனக்கு அதிகாரம் உண்டு என்பது உனக்குத் தெரியுமா, தெரியாதா?" என்று கேட்டான்.

"மேலிருந்து உமக்கு அதிகாரம் கிடைத்து இராவிட் டால், என்மேல் அதிகாரம் செலுத்த உமக்கு ஆற்றல் ஏது? ஆகவே, என்னைக் காட்டிக் கொடுத்தவர்கள் உம்மைக் காட் டிலும் அதிக பாவம் செய்தவர்கள்" என்று சொன்னுர் இயேசுநாதர்.

தனக்கு அதிகாரம் கிடைத்து இருப்பது கடவுளிட மிருந்து என்று இயேசுநாதர் கூறியதைப் பிலாத்து ஏற்க வில்லை யாயினும், இயேசுநாதர்மீது குற்றத்தைக் காணுத படியால், அவரைத் தண்டிக்க, பிலாத்துக்குச் சம்மதம் இல்லை. ஆகவே, அவன் திரும்பவும் வெளியே வந்து, இயேசு நாதரை விடுவிப்பதாகக் கூறினுன்.

இதைக் கேட்டு வெளியே நின்றவர்கள் ஆத்திரம் அடைந்தனர். பிலாத்தை எதிர்த்துப் பேசவும் அவர்களுக் குத் துணிவு உண்டாயிற்று. "இந்த மனிதன் சீசர் சக்ர வர்த்திக்கு நண்பனுக இருக்க முடியாது" என்று எச்சரித் தனர்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பிலாத்து வெல

வெலத்துப் போனான். "இவனைத் தண்டியாவிட்டால் சக்ர வர்த்தியின் கோபத்துக்கு ஆளாக நேரும். அதனால் எனது வாழ்வே அடியோடு பாழாகிவிடும். அதற்கு இடம் கொடுத் தல் கூடாது" என்று நினைத்தான் பிலாத்து.

ஆகவே, நீதி வழங்கும்போது அமர வேண்டிய ஆசனத் தில் பிலாத்து அமர்ந்தான். ரத்தம் தோய்ந்த ஆடையுட னும் முள் முடியுடனும் காட்சி அளிக்கும் இயேசுநாதரைச் சுட்டிக்காட்டி, "இதோ பாருங்கள் உங்கள் அரசனை!" என்று அருகே நின்ற ஜனங்களிடம் சொன்னான். "இவனை ஒளித்துக் கட்டுங்கள்! சிலுவையில் அறைந்து கொல்லுங் கள்!" என்று ஜனங்கள் கூச்சலிட்டுக் கத்தினர்.

"உங்கள் அரசனை நான் சிலுவையில் அறையத்தான் வேண்டுமா என்ன?" என்று பிலாத்து அவர்களிடம் கேட்டான்.

"சீசரைத் தவிர்த்து வேறு அரசர் யாரும் எங்களுக்கு இல்லை" என்று முக்கிய குருமார்கள் கூறினர்.

"அப்படியாயின் உங்கள் விருப்பம்போல் இவனைச் சிலு வையில் அறையுங்கள்" என்று சொல்லி, இயேசுநாதரை யூத குருமார்களிடம் ஒப்படைத்தான் பிலாத்து.

சிலுவையில் அறைந்தனர்

தங்கள் விருப்பப்படி தண்டனை விதிக்கப் பெற்றது குறித்து, யூத குருமார்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தாமதி யாது அந்தத் தண்டனையை நிறைவேற்றி முடிப்பதில் அவர்கள் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

ஜெருசலம் நகருக்கு வடக்கே, சிறிது தூரத்தில், மேட் டுப்பாங்கான பாறை ஒன்று இருக்கிறது. அந்தப் பாறை யின் தோற்றம் கபாலத்தைப்போல் இருந்ததால், அந்த மேட்டுக்குக் கபால மலை என்று பெயர். லத்தீன் மொழியில் அதை, "கல்வாரிக் குன்று" என்று சொல்லுவார்கள். இந்தக் குன்றின்மேல் இயேசுநாதரைச் சிலுவையில் அறைய ஏற்பாடு செய்தார்கள்,

பிலாத்து அமர்ந்து தண்டனை விதித்த அந்தோனியா கோட்டையிலிருந்து, சுமார் அரை மைல் தொலைவில் இருந்தது கல்வாரிக் குன்று.

ஒருவனைத் தண்டிக்கும்பொழுது, எதற்காக அவன் தண்டிக்கப்படுகிறான் என்பதை, ஒரு பலகையில் எழுதி, மக்களுக்குத் தெரிவிப்பது வழக்கம். அதன்படிதான் இயேசுநாதரைத் தண்டித்ததற்கு உரிய காரணத்தை, பிலாத்து ஒரு பலகையில் எழுதச் செய்தான். ''நாசரத்து ஊரைச் சேர்ந்த இயேசு; யூதர்களுக்கு அரசன்!'' என்று அந்தப் பலகையில் எழுதப்பட்டு இருந்தது. தங்களுக்கு இருந்த மகிழ்ச்சியில், இந்தப் பலகையில் எழுதப்பட்ட வசனங்களை யூதப் பிரமுகர்கள் முதலில் கவனிக்கவில்லை.

பிறகு கவனித்து, அதில் காணப்படும் குறையை, யூதப் பிரமுகர்கள் பிலாத்திடம் எடுத்துக் கூறினர். ''இவன் யூதர்களுக்கு அரசன் அல்லன்; யூதர்களுக்கு அரசன் என்று தன்னைச் சொல்லிக்கொண்டவன். ஆகவே, அவ்வாறு எழுதுங்கள்'' என்று கூறினர்.

தனக்கு இருந்த எரிச்சலில், யூதப் பிரமுகர்களின் கூற்றைப் பிலாத்து ஏற்கவில்லை. ''எழுதியது எழுதியது தான். இனி அதை நான் மாற்ற முடியாது'' என்று வெறுப்போடு கூறிவிட்டான் பிலாத்து.

மற்ற மக்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும் பொருட்டு, குற்றவாளியைத் தண்டிக்குப்பொழுது, அதைத் தடபுடல் செய்து விளம்பரப்படுத்தித் தண்டிப்பது ரோமர்களின் வழக்கம். அதன்படிதான், இப்பொழுது, இயேசுநாதரைத் தண்டிக்க யூத குருமார்கள் ஏற்பாடு செய்தார்கள்.

தான் தொங்க வேண்டிய கழுமரத்தைக் குற்றவாளியே தூக்கிச் செல்ல வேண்டும் என்பது அன்றைய சம்பிரதாயம். அதன்படி, சிலுவை என்னும் கழுமரத்தை இயேசுநாதர் கையில் கொடுத்தார்கள். அவரோடு சேர்த்து, அன்று தினம், இரண்டு திருடர்களையும் தண்டிக்க ஏற்பாடு செய்தார்கள். ஆகவே, இந்தத் திருடர்கள் ஒவ்வொருவனிடமும்

ஒவ்வொரு சிலுவையைக் கொடுத்தார்கள். அவர்கள் அணிந்திருந்த ஆடைகளைக் களைந்துவிடச் செய்து, வேறு துணியைக் கொடுத்துக் கட்டிக்கொள்ளச் செய்தார்கள்.

எல்லாம் ஏற்பாடாகி முடிந்ததும், கல்வாரி மேட்டை நோக்கிப் பவனி புறப்பட்டது. கலகம் எதுவும் நேராமல் தடுக்கும் பொருட்டு, குதிரை வீரன் ஒருவன், குதிரைமீது ஏறிக்கொண்டு, ஊர்வலத்துக்கு முன்னே சென்றான். அவனுக்கு முன்னே பறையடித்துச் சென்று, ஒருவன் வழி செய்து கொடுத்தான். அவனுக்குப் பின்னே குற்றவாளியின் பெயரைக் கூறிக்கொண்டு ஒருவன் போனான். குதிரை வீரனுக்கு இரு மருங்கிலும் படை வீரர்கள் வந்தார்கள். இயேசுநாதர் சிலுவையைச் சுமந்துகொண்டு வந்தார்; திருடர் இருவரும் தத்தமக்கு உரிய சிலுவையைச் சுமந்து வந்தார்கள். யூதக் குருமார்களும் மற்றவர்களும் அவர்களுக்குப் பின்னே வந்தார்கள்.

ஜனசந்தடி நிறைந்த, மேடுபள்ளங்களுள்ள தெருக்களின் ஊடே இந்தப் பவனி சென்றுகொண்டு இருந்தது. குற்றவாளிகளைச் சவுக்கால் அடித்து வேகமாகச் செல்லும்படி படைவீரர்கள் தூண்டினார்கள்.

குற்றவாளிகளோ சிலுவையைச் சுமந்துகொண்டு, நடக்க முடியாது தத்தளித்துத் தடுமாறி நடந்து சென்றார்கள்.

களைப்புற்றும் சோர்வுற்றும், சவுக்கடியால் நொந்தும் இருந்த இயேசுநாதர், சிலுவையைச் சுமந்துகொண்டு வெகு சிரமத்தோடு நடந்து சென்றார். சில இடங்களில் சிலுவையின் பாரத்தைத் தாங்க முடியாது தடுமாறித் தத்தளித்தார். கல்வாரிக் குன்றை அடையு முன்னே, சிலுவையின் பாரத்தால் இயேசு இறந்து போனால் என்ன செய்வது? ஆகவே, அந்தக் காலத்துச் சட்டம் இடம் கொடுத்தபடி ஒரு ஏற்பாட்டை, படைத்தலைவன் செய்தான்.

சிலுவையைச் சுமக்க முடியாது குற்றவாளி தத்தளித்தால்; அவனுக்குப் பதிலாக மற்றொருவன் சிலுவையைச் சுமந்து வரலாம். இதற்குச் சட்டம் இடம் அளித்தது.

இது சமயம் சீமோன் என்பவன் ஒருவன் அந்த வழியாக வந்துகொண் டிருந்தான். படைத் தலைவன் அவனைக் கூப்பிட்டு, இயேசுநாதரின் சிலுவையைச் சுமந்து வரும்படி கட்டளையிட்டான்.

வழிப்போக்கனும் கட்டாயத்தின் மேல் சிலுவையைச் சுமந்துகொண்டு இயேசுநாதருக்குப் பின்னே சென்றான்.

இது சமயம் மாதர்கள் கூட்டம் ஒன்று தம் பொருட்டு அழுது புலம்பிக்கொண்டு நிற்பதை இயேசுநாதர் பார்த்தார். சிறிது அங்கே நின்று அவர்களுக்கு ஆறுதல் சொன்னார். தம் பொருட்டாக அவர்கள் அழ வேண்டாம் என்றும் அவர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் இனி நேர இருக்கும் கதியை நினைத்து அழும்படியும் கூறினார். "ஜெருசல மக்களே! என் பொருட்டாக நீங்கள் அழ வேண்டாம்; உங்களுக்காகவும் உங்கள் குழந்தைகளுக்காகவும் நீங்கள் அழுங்கள்" என்று கூறினார்.



இதன் பின்னர், பவனி கல்வாரி மேட்டை அடைந்தது. சிலுவையில் அறையும்பொழுது வேதனை தோன்றாது இருக்கும் பொருட்டு, குற்றவாளிக்கு மதுவோடு மீறை என்பதைக் கலந்து, கசப்பான ஒரு பானத்தைக் கொடுப்பது வழக்கம். அந்த வழக்கப்படி, பானத்தை இயேசுநாதரிடம் குடிக்கக் கொடுத்தார்கள். இயேசுநாதர் அதைக் குடிக்க மறுத்துவிட்டார்.

பிறகு ஆடைகளைக் களைந்துவிட்டனர். தமது இடுப்பில் இயேசுநாதர் ஒரு சிறு துணியைச் சுற்றிக் கட்டிக்கொண்டார். அதன் பின்னர் இயேசுநாதரைப் படுக்கச் சொல்லி, இயேசுநாதரின் இரு கைகளையும், குறுக்கு மரத் மரத்தின் நெடுக, ஒவ்வொரு கையாக இரு மருங்கிலும் நீட்டிவிட்டு, உறுதியான ஆணியை எடுத்து, ஒவ்வொரு உள்ளங் கையிலும் வைத்து அடித்தார்கள். பிறகு தரையில் நட்டு வைத்திருந்த, நேர் மரத்துக்கு அவரைத் தூக்கிப் போய் மரத்தோடு பிணைத்து இரு பாதங்களையும் சேர்த்து ஆணியை அறைந்து, இயேசுநாதரைச் சிலுவையில் தொங்கவிட்டு, தங்கள் காரியத்தை முடித்தார்கள். திருடர்கள் இருவரையும் இயேசுநாதருக்கு இரு மருங்கிலும், சிலுவையில் அறைந்து தொங்கவிட்டார்கள்.



அப்போது சிறிது முன் பின்னாக, பகல் பன்னிரண்டு மணி இருக்கும்.

சிலுவையில் அறைந்தபோது இயேசுநாதர் அழவும் இல்லை; கதறவும் இல்லை; முனகவும் இல்லை. இறைவனோடு ஒன்றி, தியானத்தில் ஆழ்ந்திருந்தார். ஆணியை அறையும் போது, அவர்களின் பொருட்டு, இறைவனை இயேசுநாதர் இறைஞ்சினார்: ''தந்தையே! இவர்களை மன்னித்து அருளும். அறியாமல் இவர்கள் தவறு செய்கின்றனர்!'' என்று கூறினார்.

எல்லாம் முடிந்தது

தாங்கள் நினைத்தபடி, காரியம் நிறைவேறியது குறித்து, யூத குருமார்களுக்கும் பிரமுகர்களுக்கும் ஒரே ஆனந்தம். "ஒழிந்தான் துரோகி! இனி இவனால் நமக்கு எவ்வித தொல்லையும் இராது" என்ற இறுமாப்பில் மூழ்கி, அவர்கள் கேலியாகப் பேசியது பின்வருமாறு.

நடுச் சிலுவையில் தொங்கும் இயேசுநாதரை நோக்கி, "கோயிலை இடித்து, மூன்று தினங்களில் கட்டித் தருவதாகச் சொன்னவன் அல்லவா நீ? உன்னை இப்பொழுது காப் பாற்றிக்கொள்வதுதானே!"

"கடவுளின் புதல்வன் என்பது உண்மையாயின், சிலுவையைவிட்டு இறங்கி வா பார்க்கலாம்."

"எத்தனையோ பேர்களை இவன் காப்பாற்றி இருக் கிறானே! அப்படிப்பட்ட இவன் தன்னைத் தானே காப் பாற்றிக்கொள்ள முடியாமல் சிலுவையில் தொங்கு கிறானே!" என்று மற்றும் சிலர் ஏளனம் செய்தார்கள்.

"கடவுள்மீது அபார நம்பிக்கை கொண்டு இவன் பேசினானே! இவனிடம் கடவுளுக்குப் பிரியம் இருப்பது உண்மையானால், இவனை அவர் இதுவரை காப்பாற்றி இருக்க மாட்டாரா?" என்று தங்களின் அவ நம்பிக்கையைச் சிலர் வெளிப்படுத்தினார்கள்.

இப்படி அந்தக் கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவரும் தன் மனம் போனவாறு இயேசுநாதரை நிந்தித்தனர்.

இந்தப் பழிகாரர்களோடு சேர்ந்துகொண்டு, சிலுவையில் தொங்கிய திருடர்களில் ஒருவனும் இயேசுவைப் பழிக்கத் தொடங்கினான். அவன் இயேசுவைப் பார்த்து, "நீர் மெசியா என்பது உண்மையானால், உம்மைக் காப்பாற்றிக் கொண்டு, எங்களையும் நீர் காப்பாற்றி இருக்கக் கூடாதோ?" என்று கேட்டான், கிண்டல் செய்யும் கருத்துடன்.

இந்தத் திருடனின் மனப்போக்கை, மற்றொரு திருடன் கண்டித்துப் பேசினான். "இந்தக் கொடிய தீர்ப்புக்கு நீ ஆளாயிருந்தும், கடவுளுக்கு அஞ்சாது நீ பேசுவது முறையா?

நாமோ நாம் செய்த குற்றத்துக்கு உரிய தண்டனையை அனுபவிக்கிறோம். ஆனால், இந்த மனிதரோ எவ்வித குற்றமும் செய்யாதவர் என்று தோன்றுகிறது'' என்று மற்றொரு திருடன் கூறினான்.

இயேசுநாதரின் பெருமைகளையும் அவர் செய்த புதுமைகளையும்பற்றி நல்ல மனமுள்ள இந்தத் திருடன் கேள்விப்பட்டு இருக்க வேண்டும். வான் அரசைப்பற்றி, அவர் பிரச்சாரம் செய்து வந்தது இவன் நினைவுக்கு வந்திருக்க வேண்டும். கேள்வியும் நினைவும் உள்ளத்தில் மாறுதலை உண்டாக்கியதைக் காட்டிலும், நேரில் பார்த்த காட்சி, இந்தத் திருடனின் உள்ளத்தை அதிகம் உருக்கி இருக்க வேண்டும்.

''இத்தனை பாடுகளையும் ஏளனத்தையும் இவர் எவ்வளவு பொறுமையோடு சகிக்கிறார்! பயமோ பீதியோ முகத்தில் தென்படக் காணோம்! ஆனால், கருணை நிறைந்து அந்த முகம் காட்சி தருகிறது! என்னே இவருக்கு இருக்கும் உறுதிப்பாடு!'' என்று இந்தத் திருடன் வியந்தான்.

இந்த வியப்பின் காரணமாக, அவன் உள்ளத்தில், ''இவர் சாதாரண மனிதர் அல்லர்! அரசராய் இருப்பதற்கு உரிய அருகதை இருப்பதால்தான் இவரை மக்கள் மெசியா என்றும், யூதர்களுக்குஅரசன் என்றும், கூறுகிறார்கள். ஆகவே, ஏதோ ஒரு அரச பதவிக்கு உரியவர் இவர் என்பதில் சந்தேகம் இல்லை'' என்று நம்பினான். எனவே அவன் இயேசு நாதரிடம், ''கர்த்தரே! உமது அரசினுக்குள் நீர் செல்லும் போது, என்னையும் நீர் நினைத்துக்கொள்ளும்'' என்று அந்தத் திருடன் இறைஞ்சினான்.

உடனே இயேசுநாதர் அவனிடம், ''அஞ்சாதே! இன்றே வான் உலகில் என்னோடு நீயும் இடம் பெறுவாய்!'' என்று கூறினார்.

பழித்துப் பேசி, இகழ்ந்தவர்கள் நின்றதைப் போலவே, இயேசுவைப் பரிவோடு நோக்குபவர்களும், சிறிது தூரத்தில் சிலுவை அருகில் நின்றார்கள். இயேசுவுக்கு மிகவும் பிரியமான ஜான், அவருடைய அன்னை மேரி, சகோதரி மேரி, மரியா மத்தலேனா ஆகிய நால்வரும் நின்றார்கள்.

இன்னும் சிறிது தூரம் தள்ளி, மற்றும் சில பெண் மணிகள் அழுது புலம்பிக்கொண்டு நின்றார்கள்.

காவல் படையினர், மேரி, ஜான் முதலானவர்களைச் சிலுவை அருகே செல்ல அனுமதிக்கவில்லை. அயர்வினாலும் சோர்வினாலும் இயேசுநாதரால் பேச முடியவில்லை; ஆகவே ஒவ்வொருவரும் இயேசுநாதரைப் பார்த்தனர்; இயேசு நாதரும் அவர்களைப் பார்த்தார்.

அன்னை மேரி, தன் அருமை மகனின் நிலைமையைப் பார்த்து, அளவற்ற துயரத்தில் மூழ்கினாள்; தம் மகனை இழந்து பரிதவித்து நிற்கும்தாயை நோக்கி இயேசு, "அம்மா! இதோ உன் மகன்!" என்று, தனக்குப் பிரியமான ஜானைச் சுட்டிக் காட்டினார். பிறகு தம் சீடன் ஜானிடம் "இதோ உன் அன்னை" என்று தன் தாய் மேரியை ஜானுக்குச் சுட்டிக் காட்டினார்.

தம் அன்னை மேரியை, ஜான் இனி சொந்தத் தாய்போல் கவனிக்க வேண்டும் என்றும், ஜானைத் தன் சொந்த மகன் போல் மேரி பாவிக்க வேண்டும் என்றும் இயேசுநாதர் இவ்வாறு சொல்லிக் குறிப்பால் உணர்த்தினார்.

அன்றிலிருந்து, இயேசுவின் அன்னையைத் தன் சொந்த அன்னைபோல் கருதி, ஆதரித்துக் காப்பாற்றி, மரியாதை செய்து போற்ற ஜான் தவறவில்லை.

கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள், இயேசுநாதரின் அன்னை மேரியை, பெரிதும் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்தவர்கள் வழிபாடு செய்யும் இடத்தை, "மாதா கோவில்" என்று தமிழ் நாட்டவர்கள் குறிப்பிடுகிறார்கள். "மாதா" என்னும் சொல், இங்கே இயேசுவின் அன்னை மேரியைக் குறிக்கிறது என்பதை நாம் மறக்கலாகாது.

இது சமயம் இயேசுநாதரின் உடல் தளர்வடையத் தொடங்கிற்று; நாடு முழுதும் ஒளி மங்கி, இருள் பரவத் தொடங்கிற்று; நண்பகல் மூன்று மணி அளவில், "என் இறைவனே! என் இறைவனே! என்னை நீ ஏன் கைவிடுத் தாய்?" என்று உரத்த குரலில் இயேசுநாதர் கதறினார்.

பிறகு சிலுவையில் தொங்கியவாறே, "எனக்குத் தாக

மாய் இருக்கிறது'' என்று கூறினர்.

உடனே அருகில் இருந்த காவல் படையினன் ஒருவன், காடியும் தண்ணீரும் கலந்து வைத்திருக்கும் ஜாடியில் கடல் பஞ்சைத் தோய்த்து, அதை ஒரு தண்டில் சொருகி, இயேசுநாதரின் வாய் அருகே பிடித்தான்.

இயேசுநாதர் அதிலிருந்து சிறிது பானத்தை உறிஞ்சினர். பிறகு ''எல்லாம் பூர்த்தியாயிற்று!'' என்று மெதுவாகச் சொன்னர்.

சிறிது நேரத்துக்குப் பின்னர், இயேசுநாதரின் உடல் முழுதும் ஒருவித நடுக்கம் உண்டாயிற்று. பிறகு,''இறைவா! எனது ஆவியை உமது கரங்களில் ஒப்படைக்கிறேன்'' என்று உரக்கக் கூவினர் இயேசுநாதர்.

இவ்வாறு இயேசுநாதர் கூறி முடித்ததுதான் தாமதம், அவருடைய தலை ஒரு பக்கம் சிறிது சாய்ந்து தொங்கிற்று; இயேசுநாதர் இவ் உலக வாழ்வை நீத்தார்.

இது சமயம் தேவாலயத்தின் மூல ஸ்தானத்தில் தொங்கிய திரை, அடிதொடங்கி, இரண்டாகக் கிழிந்து போயிற்று.

அடக்கம் செய்தனர்

இயேசுநாதர் உயிர்நீத்த சமயம், ஜெருசலம் ஆலய மூல ஸ்தானத்தை மறைத்திருந்த திரைச் சீலை, மேல் தொடங்கி அடி மட்டும் இரண்டாகக் கிழிந்தது மட்டுமல்லாமல், எதிர்பாரா வண்ணம் எங்கும் இருள் சூழலாயிற்று; பூமி அதிர்ந்தது; கற்பாறைகள் பிளந்தன.

இந்த அற்புத நிகழ்ச்சிகளை எல்லாம் பார்த்ததும், அங்கு கூடி நின்ற மக்கள் பயந்து போனர்கள். அச்சம் மேலிட்டு, இனி என்ன நேருமோ என்று கிலி பிடித்துப் போய்,மார்பில் அறைந்துகொண்டு தத்தம் வீடு போய் சேர்ந்தார்கள்.

சிலுவையில் அறையும் பொறுப்பைக் கண்காணிக்க வந்திருந்த படைத் தலைவன் இந்த அற்புதங்களை எல்லாம்

பார்த்து வியப்புற்றான். ''உண்மையாகவே இவர் குற்ற மற்றவர்தான்; இவர் கடவுளுடைய குமாரன் என்பதும் உண்மைதான்'' என்று அவன் சொன்னான்.

• • •

சனிக்கிழமையை ஓய்வு நாளாகக் கருதியபடியால் அன்று தினம் எதையும் யூதர்கள் செய்ய மாட்டார்கள். நாளைக் கணக்கிடும்போது, மாலை ஆறு மணியிலிருந்து மறு நாள் மாலை ஆறு மணிவரை இருக்கும் பொழுதை ஒரு நாளாக அவர்கள் கணக்கிடுவார்கள்

இயேசுநாதர் வெள்ளிக் கிழமை மாலை மூன்று மணிக்கு உயிர் துறந்தார். அன்று மாலை ஆறு மணி வந்தால் சனிக் கிழமை ஆரம்பமாகிவிடும். ஆகவே, செய்ய வேண்டிய அலுவல்களை எல்லாம் அன்று மாலை ஆறு மணிக்குள் முடித்துக்கொள்ள வேண்டும். அவற்றில் அங்கிருந்தவர்கள் கவனம் செலுத்தினார்கள்.

மேலும் அன்று தினம் ஆறு மணி வந்தால் பாஸ்கு விழா எனும் மிகப் பெரிய திருநாள் ஆரம்பமாகிவிடும். விழா தொடங்கும் சமயம், சிலுவையில் யாரும் தொங்கக் கூடாது என்பது யூதர்களின் சம்பிரதாயம். அறை யுண்டவர்கள் சிலுவையிலேயே உயிர் துறந்தால், அவர்களைச் சிலுவை யிலிருந்து இறக்கி, கல்லறையில் புதைப்பார்கள். இறக்காது இருந்தால், அவர்களின் கணைக் கால்களைத் தடியால் அடித்து முறித்துக் கொன்று, அதன் பின்னர் பிணங்களைத் தூக்கி நாய் நரிகளுக்கு இரையாகப் போட்டுவிடுவார்கள்.

ஆகவே, யூதப் பிரமுகர் ஒருவர் சிலுவையில் தொங்கும் இயேசுநாதரை அடக்கம் செய்ய அனுமதிபெறும்பொருட்டு, பிலாத்திடம் போனார்.

இவர் அரிமத்தேயா என்னும் ஊரைச் சேர்ந்தவர்; பெயர் யோசப்பு; திரண்ட செல்வமும் செல்வாக்கு முடையவர்; சனதரீம் சபையின் உறுப்பினர்களில் ஒருவர். இயேசுநாதரைப் பெரிதும் மதித்தபோதிலும், அதை வெளிக் காட்டிக்கொள்ளப் பிரியப்படாமல், அந்தரங்கத்தில் சீடராய் இருந்தவர் அவர்.

இயேசுநாதரின் உறவினர்களும் நண்பர்களும் வேண்டிக் கொண்டதன் பேரில், பிலாத்திடம் மேற்சொன்ன அனுமதி பெற்றுப் போக இவர் வந்தார். இயேசுநாதர் சிலுவையில் இறந்துவிட்டதாகவும், அவரை எடுத்து அடக்கம் செய்ய அனுமதி வேண்டும் என்றும் பிலாத்திடம் யோசப்பு சொன்னார்.

இவ்வளவு சீக்கிரம் இயேசுநாதர் இறந்து போனதை அறிந்து, பிலாத்து வியப்புற்றான். யோசப்பு விரும்பியபடி, இயேசுநாதரை அடக்கம் செய்ய அனுமதி கொடுத்தான்.

பாஸ்கு விழா நெருங்கிக்கொண்டிருப்பதால், உயிரோடிருப்பவர்களை கணைக் காலை முறித்துக் கொன்று, சிலுவையில் தொங்குபவர்களை அடக்கம் செய்துவிட வேண்டும் என்ற விருப்பத்தை, யூத குருமார்கள், பிலாத்திடம் தெரிவித்தார்கள்



அதற்கும் பிலாத்து அனுமதி கொடுத்தான். அந்தக் காரியத்தைச் செய்வதற்காகப் படைவீரர்கள் சிலரையும் கல்வாரி மேட்டுக்குஅனுப்பி வைத்தான்.

படை வீரர்கள் கல்வாரிக்கு வந்து, திருடர்களின் கணைக் கால்களை முறித்துக் கொன்று அவர்களின் பிணங்களைத் தூக்கி அப்பால் எறிந்தார்கள். இயேசுநாதரை அணுகியபோது, அவர் உயிரற்றுக் கிடப்பதைக்

கண்டு, அவருடைய கணைக் கால்களை முறிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாது போயிற்று.

ஆயினும் இயேசுநாதரின் விலாப் புறத்தில் ஒரு படை வீரன் ஈட்டியால் குத்தினான்.

உடனே இரத்தமும் தண்ணீரும் அதிலிருந்து வெளிப் பட்டன.

அனுமதி கிடைத்ததும், இயேசுநாதரை அடக்கம் செய்யத் தேவைப்படும் துணியை யோசப்பு வாங்கிக்கொண் டார். பிறகு அவர் நேரே கல்வாரி மேட்டுக்கு வந்து சேர்ந்தார்.

இதன் பின்னர் நிக்கோதேமன் என்னும் பிரமுகரும் வந்து சேர்ந்தார். வெள்ளைப்போளம், கரிய போளம் முதலிய நறுமணப் பொருள்களை வாங்கிக்கொண்டு, கல்வாரிக்கு வந்தார்.



பிறகு இருவரும் சேர்ந்து, இயேசுநாதரின் திருமேனியைச் சிலுவையிலிருந்து இறக்கினார்கள். இயேசுநாதரின் அன்னை மேரி, அந்த உடலைத் தன் கரங்களில் வாங்கிக் கொண்டாள்.

தான் வாங்கி வந்து இருந்த நறுமணப் பொருள்களை இயேசுநாதரின் உடல்மீது நிக்கோதேமன் தூவினார்: யோசப்புதான் வாங்கி வந்திருக்கும் துணியை, இயேசு

நாதரின் உடல்மீது யூதர்களின் வழக்கப்படி சுற்றினர்.

நேரம் கொஞ்சமே இருந்தது. பக்கத்திலுள்ள ஒரு தோட்டத்தில் இருக்கும் கல்லறையில் இயேசுநாதரின் உடலை அடக்கம் செய்ய அவர்கள் எடுத்துப் போனார்கள்.

கல்வாரி மேட்டை அடுத்து, ஒரு தோட்டம் இருந்தது. அது யோசப்புக்குச் சொந்தமான தோட்டம். இறந்த பின் தன்னை அடக்கம் செய்யும் பொருட்டு, இந்தத் தோட்டத்தில் ஒரு கல்லறையை முன்னதாகவே சிறப்பான முறையில் யோசப்பு ஏற்பாடு செய்து வைத்து இருந்தார்.

இந்தக் கல்லறையில், இயேசுநாதரின் புனித உடலை அடக்கம் செய்ய யோசப்பு இசைந்தார். ஆகவே, இயேசு நாதரின் உடலை அந்தக் கல்லறைக்குள் வைத்தார்கள். பிறகு பெரிய கல்லால் வாயிலை மூடிவிட்டு, தத்தம் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

இயேசுநாதரின் சீடர்களில் ஜான் என்பவருக்கு மட்டும் தான், இயேசுநாதரை அடக்கம் செய்யும் காலத்தில் அருகே இருக்கும் பேறு கிடைந்தது.

அடக்கம் செய்து முடித்ததும், இயேசுநாதரின் அன்னை மேரியை, ஜான் தம் இல்லத்துக்கு அழைத்துப் போனார்.

மரியா மத்தலேனாவும், மற்றொரு மேரியும் கல்லறையை விட்டுப் பிரிய மனமின்றி, சிறிது நேரம்வரை அங்கேயே இருந்தார்கள். மற்றவர்கள் திரும்பிவிட்ட பின்பு, அருகே சென்று, கல்லறையைக் கவனித்தார்கள்.

இன்னும் சிறிது நேரத்தில் ஓய்வு நாளான சனிக்கிழமை ஆரம்பமாகிவிடும். அன்று ஒன்றும் செய்ய முடியாதாகையால், ஞாயிற்றுக்கிழமை யன்று, தாங்கள் மேலும் செய்ய விரும்பிய மரியாதையை இயேசுநாதருக்குச் செய்யலாம் என்ற எண்ணத்துடன் அந்தப் பெண்மணிகள் ஊருக்குள் சென்றார்கள்.

பிறகு இயேசுநாதர் அவர்களை உணவு உண்ண அழைத்தார்.

வந்ததும் வழக்கப்படி ரொட்டியையும் மீன்களையும் அவர்களுக்கு இயேசுநாதர் விண்டு கொடுத்தார்.

சீடர்கள் சாப்பிட்டார்கள். சாப்பாடு முடிந்ததும், இயேசுநாதர் பீட்டரை நோக்கி, ''இவர்களைக் காட்டிலும் என்னை நீ அதிகம் நேசிக்கிறாயா?'' என்று கேட்டார்.

''ஆண்டவரே! உமக்குத் தெரியுமே!'' என்று பீட்டர் பதில் சொன்னார்.

''என் மக்களை நேசித்துக் காப்பாற்றும் பொறுப்பை நான் உன்பால் ஒப்படைக்கிறேன்'' என்னும் கருத்தில், ''என் ஆடுகளை மேய்ப்பது உன் பொறுப்பு'' என்று இயேசு நாதர் கூறினார்.

இதே கேள்வியை மூன்று முறை பீட்டரிடம் இயேசு நாதர் கேட்டார்; பீட்டரும் மூன்று முறை அதே பதிலைச் சொன்னார்.

மூன்று முறை பீட்டர் மறுத்தலித்ததை, நினைவுபடுத்தும் பொருட்டே இவ்வாறு இயேசுநாதர் மூன்று முறை கேட்டார் என்று சில ஆசிரியர்கள் எழுதி இருக்கிறார்கள்.

இதன் பின்னர், உயிர்த்து எழுந்த நாள் முதல் நாற்பது நாட்கள் வரை, சீடர்களுடன் இருந்து, செய்ய வேண்டிய போதனைகளை எல்லாம் இயேசுநாதர் அவர்களுக்குச் செய்தார். போதனைகளை நிறைவேற்றுவதற்குரிய ஆற்றலையும் அறிவையும் அவர்களுக்குக் கொடுத்தார். ''உங்கள் போதனைகளை ஜெருசலத்தில் தொடங்குங்கள்'' என்று கூறினார்.

பிறகு அவர்கள் அனைவரையும் பெத்தனிக்கு அருகே இருக்கும் ஒலிவேத்து மலைக்கு இயேசுநாதர் அழைத்துப் போனார்; சீடர்களைச் சுற்றி இருக்கச் செய்து, தமது திருக் கரங்களை உயர்த்தி ஆசீர்வதித்தார். ஆசீர்வதித்துக் கொண்டே, அவர்கள் பார்த்து இருக்க, வான் உலகை நாடிக் கிளம்பினார். அவர்கள் வியந்து பார்த்திருக்கும்

இல்லாதவர்கள். ஆகவே, மீன் பிடிக்கலாம் என்று பீட்டர் கருதினார். அந்தக் கருத்தை மற்றவர்களிடம், ''நான் மீன் பிடிக்கப் போகிறேன்'' என்று அவர் சொன்னார்.

அதன்படி ஒரு நாள் இரவு, எல்லாரும் பீட்டருடன் சேர்ந்து மீன் பிடிக்கச் சென்றார்கள். இரவு முழுதும் வலை வீசிப் பார்த்தும், ஒரு மீன்கூட வலையில் விழவில்லை. ஆகவே, படகைக் கரையோரமாக அவர்கள் செலுத்தினார்கள்.

அப்போது வைகறை நேரம். ஒரு மனிதர் கரையில் நின்றுகொண்டு செம்படவர்களைப் பார்த்தார். ''ஏதாவது மீன் அகப்பட்டதா?'' என்று அவர்களைக் கேட்டார்.

''ஒன்றும் கிடைக்க வில்லை'' என்று செம்படவர்கள் சொன்னார்கள்.

''அப்படியானால், படகின் வலது பக்கத்தில் வலையை வீசிப் பாருங்கள். மீன்கள் கிடைக்கும்'' என்று அந்த மனிதர் சொன்னார்.

அவர் சொன்னபடி வலது பக்கம் வலையை வீசியதும், வலை நிறைய மீன்கள் கிடைத்தன. அவர்களால் வலையைக் கரைக்கு இழுக்க முடியவில்லை.

சீடரில் ஒருவர், கரையில் நிற்பவர் இயேசுநாதர் என்பதை இது சமயம் தெரிந்துகொண்டார். ''அதோ ஆண்டவர்!'' என்று மற்றவர்களிடம் அவர் சொன்னார்.

வந்திருப்பவர் இயேசு என்பது தெரிந்ததும், பீட்டர் படகிலிருந்து குதித்துக் கரைக்குச் சென்றார்; மற்றவர்கள் வலையை இழுத்துக்கொண்டு கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அது சமயம் நெருப்பை மூட்டி, சிறிது உணவு தயார் செய்துகொண் டிருந்தார் இயேசுநாதர். சீடர்கள் கரை சேர்ந்ததும், ''நீங்கள் பிடித்த மீன்களில் கொஞ்சம் கொண்டு வாருங்கள்'' என்று இயேசுநாதர் சொன்னார்.

சீடர் எண்ணிப் பார்த்தார்கள். நூற்று ஐம்பத்து மூன்று பெரிய மீன்கள் வலையில் விழுந்து இருப்பதைக் கண்டு, அவற்றில் இரண்டு மூன்று மீன்களை எடுத்துப்போய் இயேசுநாதரிடம் கொடுத்தார்கள்.

அதன் பின்னர், மற்ற சீடர்களுடன் தாமஸ் இருக்கும் சமயம் இயேசுநாதர் மீண்டும் அவர்களுக்குக் காட்சி தந்தார். ''சாந்தி உண்டாகட்டும்!'' என்று தம் சீடர்களை அவர் வாழ்த்தினர்.

பிறகு தாமஸ் என்னும் சீடரை நோக்கி, ''இதோ என் கைகளில் இருக்கும் காயங்களைப் பார்; காயத்துக்குள் உன் விரலை விட்டுச் சோதித்துக் கொள். விலாப் பக்கத்திலும் கையை வைத்துப் பார்; பிறகு நம்பு'' என்று சொன்னர். இப்படி இயேசு நாதர் சொன்னதும் தாமஸின் உள்ளம் மாற்றம் அடைந்து விட்டது. ''என் ஆண்டவனே! என் இறைவனே!'' என்று சொல்லி, இயேசு இருக்கிறர் என்பதை அவர் நம்பினர்.



''என்னை நேரில் பார்த்தபடியால்தான் நீ நம்புகிறுய். என்னைப் பாராமல் இருந்தும், என்மீது நம்பிக்கைக் கொள்வோரே பேறு பெற்றோர்'' என்று அவருக்குப் பதில் சொன்னர் இயேசுநாதர்.

பாஸ்கு விழா முடிந்ததும், அவர் கூறியிருந்தபடி, சீடர்கள் தம்மைக் கலிலேயாவில் சந்திக்கும் பொருட்டு, கலிலேயாவுக்குப் புறப்பட்டுப் போனர்கள். கப்பர்நகூம் பகுதியில் தங்கி இயேசுநாதரை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்தார்கள்.

அவர்கள் அனைவரும் ஏழைகள்; வருவாய்க்கு வேறு வழி

உடனே இயேசுநாதர் அவர்களிடம், ''ஏன் நீங்கள் இப்படிக் கலக்கமுற்றுத் தவிக்கிறீர்கள்? இதயத்தில் சந்தேகத்துக்கு இடம் கொடாதீர்கள். எனது கைகளையும் கால்களையும் பாருங்கள்! பேய் என்று நினையாதீர்கள்! பேய்க்கு எலும்பும் சதையும் இருக்குமா? என்னைத் தொட்டுப் பாருங்கள்'' என்று தமது கால்களையும் கைகளையும் இயேசுநாதர் அவர்களுக்குக் காட்டினார்.

அப்படிக் காட்டியும் சீடர்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ஆயினும் அவர்கள் உள்ளத்தில் ஏதோ ஒருவித மகிழ்ச்சியும் வியப்பும் இடம் பெற்று இருந்தன.

தம் சீடர்களுக்கு நம்பிக்கைப் பிறக்கவில்லை என்பதைத் தெரிந்துகொண்ட இயேசுநாதர், தாம்தான் இயேசு என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்ட எண்ணி, ''உண்பதற்கு ஏதாவது உண்டா?'' என்று கேட்டார்.

''ஆம்'' என்று சொல்லி, பொரித்த சிறு மீன் துண்டம் ஒன்றை இயேசுநாதரிடம் அவர்கள் கொடுத்தார்கள்.

அதை வாங்கி அவர்களுக்கு எதிரே இயேசுநாதர் சாப்பிட்டார்.

இதன் பின்னர், சீடர்கள் அவரை நம்பினர். பிறகு சீடர்களுக்கு அதிகாரத்தையும் ஆற்றலையும் ஆசியையும் வழங்கிவிட்டு, இயேசுநாதர் மறைந்து போனார்.

இந்த நிகழ்ச்சி நடந்த சமயம் அப்போஸ்தலர் தாமஸ் அங்கு இல்லை. அவர் திரும்பி வந்ததும், மற்ற சீடர்கள் பதின்மரும், இயேசுநாதரைத் தாங்கள் தரிசித்ததாயும் அவருடைய பாதங்களையும் கைகளையும் தாங்கள் பார்த்ததாயும் தாமஸிடம் கூறினார்கள்.

அவர்கள் கூறியதை அப்போஸ்தலர் தாமஸ் முதலில் நம்பவில்லை. ''இயேசுவை நேரில் நானே பார்க்க வேண்டும்; அவருடைய கைகளையும் கைகளில் இருக்கும் துவாரத்தையும் பார்த்து, அதில் என் விரலைவிட்டுச் சோதிக்க வேண்டும்; இயேசு உயிருடன் இருக்கிறார் என்பதை நம்ப முடியாது'' என்று பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டார்,

இந்த உரையாடல் நடந்து எட்டு நாட்கள் ஆயின.

அப்போது இயேசுநாதர் அப்பத்தை எடுத்துப் பிட்டு, ஆசீர்வதித்து, சீடர் இருவர் கைகளிலும் கொடுத்தார்.



கண்கள் திறவுண்டு, சீடர்கள் இருவரும் இயேசு நாதரைத் தெரிந்து கொண்டனர்; ஆனால், இயேசுநாதரோ அந்த இடத்தை விட்டு அந்தக் கணமே மறைந்து போனார்.

சீடர்களுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "வழி நடந்து வரும்போது, மறைநூல்களிலிருந்து அவர் தந்த விளக்கம் நமது நெஞ்சத்தைப் பற்றி ஈர்த்ததே! அப்போது நாம் தெரிந்துகொள்ளாமல் போனோமே!" என்று ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

பிறகு தாமதியாது அங்கிருந்து ஜெருசலத்துக்கு அவர்கள் புறப்பட்டார்கள். மற்ற சீடர்களை அங்கே சந்தித்து இயேசுநாதரைத் தாங்கள் நேரில் கண்ட விவரத்தை அவர்களிடம் சொன்னார்கள்.

சீடர்கள் அனைவரும் கதவைத் தாழிட்டுக்கொண்டு ஒரு அறையில் இருந்தார்கள். தாமஸ் என்னும் சீடர் மட்டும் அப்போது அங்கு இல்லை.

இருவர் வந்து கூறியதை மற்ற பத்துசீடர்களும் முதலில் நம்பவில்லை. இதுபற்றி அவர்கள் உரையாடிக்கொண்டிருந்த சமயம், இயேசுநாதர் அவர்களுக்கு மத்தியிலே தோன்றி, "உங்களுக்குச் சாந்தி உண்டாகட்டும்!" என்று அவர்களை வாழ்த்தினார்.

சீடர்களோ, ஏதோ பேய் வந்திருப்பதாகப் பயந்து போனார்கள். திகிலடைந்து போய், பேச முடியாது திகைத்துப் போனார்கள்,

னும் மகத்தான செயல்களைச் செய்து காட்டியவர்! அவரை யூத குருமார்களும், பிரமுகர்களும், அதிகாரிகளும் சேர்ந்து, சிலுவையில் அறைந்து கொன்றுவிட்டார்கள். அவர் இஸ்ரவேலயர்களை மீட்பார் என்று நாங்கள் நம்பி இருந்தோம். ஆனால் எல்லாம் முடிந்துவிட்டது. இவை அனைத்தும் நடந்து இன்று மூன்றாம் நாள் நடக்கிறது. ஆனால், எங்களைச் சேர்ந்த பெண்கள் சிலர் இன்று எங்களைப் பயத்தில் மூழ்கடித்துவிட்டார்கள். அதி காலையில் அவர்கள் இயேசுநாதரின் கல்லறைக்குச் சென்றார்களாம்! கல்லறை வெறுமையாய் இருக்கிறதாம்! வானவர்களைக் கண்டார்களாம்! இயேசுநாதர் உயிர்த் தெழுந்துவிட்டாராம்! அவர்கள் பேச்சை நம்பி, எங்களில் சிலர் கல்லறைக்குச் சென்று பார்த்தார்கள்; கல்லறை காலியாய்க் கிடக்கிறது அங்கே இயேசுநாதரின் சடலத்தைக் காணோம்!'' என்று சொன்னார்கள்.

இப்படி எல்லாம் அவர்கள் கூறியதும், வழிப்போக்கர் போல இடையில் வந்து அவர்களுடன் சேர்ந்துகொண்ட இயேசுநாதர் அவர்களை இதமாகக் கண்டித்தார். ''மீட்பரைப்பற்றி, தீர்க்கதரிசிகள் இதுவரை கூறி இருப்பதை நீங்கள் படிக்கவில்லையா? பல துன்பங்களை அனுபவித்த பின்னரே, மீட்பர் மகிமை பெற வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கூறி, யூத மறை நூல்களிலிருந்து சான்றுகளை அவர் எடுத்துக் காட்டினார்.

மூவரும் பேசிக்கொண்டே வழி நடந்தார்கள். பொழுது சாய்ந்துவிட்டது. வழிப்போக்கரோ மேலும் வழி நடந்து போக வேண்டியவர் போலக் காட்டிக்கொண்டார்.

இதைக் கவனித்த சீடர் இருவரும், அந்த வழிப்போக்கரிடம், ''ஐயா! பொழுது சாய்ந்துவிட்டது. ஆகையால் நீர் வந்து எங்களுடன் தங்கும்'' என்று வருந்திக் கேட்டுக் கொண்டார்கள்.

சம்மதித்து இயேசுநாதர் அன்றையத் தினம் அவர்களுடன் தங்கினார்.

மாலை உணவு அருந்த மூவரும் உட்கார்ந்தார்கள்.

நிகழ்ச்சிகளைப்பற்றிக் கவலையோடு பேசிக்கொண்டு அவர்கள் வழி நடந்து போனார்கள்.

இப்படி இருவரும் பேசிக்கொண்டு சென்றபோது அதே ஊருக்குச் செல்லும் வழிப்போக்கர்போல, ஒருவர் இடையே வந்து அவர்களுடன் சேர்ந்துகொண்டார்.

இப்படி இடையில் வந்து தங்களுடன் சேர்ந்துகொண்ட வரை, சீடர் இருவரும் முதலில் யாரென்று தெரிந்து கொள்ளவில்லை.



வந்து சேர்ந்து கொண்டவரோ அவர்களிடம், "எதைப் பற்றி நீங்கள் பேசிக் கொண்டு போகிறீர்கள்? நீங்கள் ஏன் கவலையோடு இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

சீடர்களில் ஒருவர் அவரைப் பார்த்து, "நீர் இந்தப் பகுதிக்கு அன்னியர் போல் தோன்றுகிறது; அதனால்தான் நீர் இப்படிக் கேட்கிறீர்! ஜெருசலத்தில் இப்போது நிகழ்ந்தவை பற்றித்தான் நாங்கள் பேசிக்கொண்டு போகிறோம்" என்று சொன்னார்.

"ஜெருசலத்தில் நிகழ்ந்தவையா? அது என்ன?" என்று வினவினார் அந்த வழிப்போக்கர்.

"நாசரத்துக்காரரான இயேசுவைப் பற்றியே நாங்கள் பேசிக்கொண்டு போகிறோம். அவரைப் பற்றி நீர் எதுவும் கேள்விப்பட்டது இல்லையா! அவர் ஒரு தீர்க்கதரிசி! மாந்தரும் இறைவனும் காணும்படி சொல்லாலும் செயலா

கிறீர் சொல்லும். அதை நான் எடுத்துச் செல்லுவேன்!'' என்று வேண்டினாள்.

உடனே அந்த மனிதர், ''மேரி!'' என்று அழைத்தார்.

மத்தலேனா புரிந்துகொண்டாள். எதிரே நிற்பவர் இயேசுநாதர் என்பதைத் தெரிந்துகொண்டு, ''குருநாதா!'' என்று கூறி, உடனே அவருடைய பொன்னடிகளில் விழுந்து, அவற்றைப் பற்றிக்கொள்ள முயன்றாள்.

இயேசுநாதர் அவளிடம், ''என்னை இப்படிப் பற்றிக் கொள்ள வேண்டாம். என் தந்தையான இறைவனிடம் இன்னும் நான் செல்லவில்லை. நீ என் சகோதரர்களிடம் (சீடர்களிடம்) செல். என் தந்தை, உங்கள் தந்தையாய் இருக்கும் இறைவனிடம் நான் செல்லுகிறேன் என்னும் செய்தியை அவர்களிடம் தெரிவி'' என்று சொன்னார்.

இயேசுநாதர் சொன்ன இந்தச் செய்தியைச் சீடர்களிடம் தெரிவிக்கும் பொருட்டு மத்தலேனா புறப்பட்டுப் போனாள். சீடர்களைச் சந்தித்து, தான் இயேசுநாதரைச் சந்தித்ததையும் அவர் தன் மூலம் அவர்களுக்கு அனுப்பிய செய்தியையும் சீடர்களிடம் சொன்னாள்.

மத்தலேனாவின் கூற்றைச் சீடர்கள் நம்பவில்லை.

''ஏதோ பெண்கள் உணர்ச்சிவயப்பட்டுப் பிதற்று கிறார்கள்'' என்று நினைத்துக்கொண்டு, சீடர்கள் சும்மா இருந்துவிட்டார்கள்.

விண்ணுலகு சென்றார்

இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்ற சமயம், ஜெருசலத்திற்கு பாஸ்கு விழாவுக்கு வந்திருந்த யாத்ரீகர்கள் சிலர் தத்தம் ஊருக்குத் திரும்பிக்கொண்டு இருந்தார்கள்.

அப்படித் திரும்பியவர்களில், இயேசுநாதரை நேசித்த சீடர் இருவர் இருந்தனர். இருவரும் தங்கள் சொந்த ஊரான எம்மாஸுக்குத் திரும்பிக்கொண் டிருந்தனர். கடந்த வெள்ளிக்கிழமை யன்று ஜெருசலத்தில் நடந்த

ளுள். சீடர்கள் இருவருடனும் சேர்ந்து வந்தாளா, அல்லது பிறகு வந்தாளா என்பது திட்டமாகத் தெரியவில்லை. திரும்பி வந்த மத்தலேனு, கல்லறை அருகே நின்று அழுதுகொண்டு இருந்தாள்; தனக்கு இருந்த ஆர்வத்தின் காரணமாக மீண்டும் ஒரு முறை குனிந்து கல்லறையினுள் அவள் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! உள்ளே இரு வானவர்கள் இருப்பதை அவள் கண்டாள். இயேசுநாதரைக் கிடத்திய இடத்தில், கால்மாட்டில் ஒருவரும் தலைமாட்டில் ஒருவருமாக வானவர்கள் உட்கார்ந்து இருந்தனர்.

அவர்கள் இருவரும் மத்தலேனுவிடம், ''மாதே! நீ ஏன் அழுகிறுய்?'' என்று கேட்டார்கள்.

''என் ஆண்டவரை யாரோ எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். எங்கே வைத்திருக்கிறுர்களோ, தெரியவில்லை'' என்று மத்தலேனு பதில் சொன்னுள்.

இவ்வாறு பதில் சொல்லிவிட்டு, மத்தலேனு, எதையோ தேடுபவள் போல, சுற்று முற்றும் பார்த்தாள்; அங்கே ஒரு ஆள் நின்றுகொண்டிருந்தார். ஒருவேளை இந்த ஆள் தோட்டக்காரனுய் இருந்தாலும் இருக்கலாம் என்று கருதிய அவள், எதுவுமே பேசாது அழுதுகொண்டு நின்றுள்.



இதைக் கவனித்த அந்த ஆள், ''ஏன் அம்மா! அழுகிறுய்? யாரை நீ தேடுகிறுய்?'' என்று மத்தலேனுவைக் கேட்டார்.

அதற்கு மத்தலேனு, ''என் குருநாதரின் உடலை இங்கிருந்து அகற்றி, எந்த இடத்தில் நீர் வைத்திருக்

மரியா மத்தலேனா சீடர்களிடம் விவரம் தெரிவிக்கச் சென்ற சமயம், மற்றப் பெண்மணிகள், நறுமணப் பொருள் களை வாங்கிக்கொண்டு இயேசுநாதரின் கல்லறை இருக்கும் தோட்டத்துக்கு வந்தார்கள். ''கல்லறை வாயிலை மூடி யிருக்கும் பெரிய கல்லை எவ்வாறு புரட்டுவது? நமக்கு யார் உதவி செய்வார்கள்?'' என்ற சிந்தனையில் தோய்ந்தவர் களாய் கல்லறையை அடைந்தார்கள். பெரிய கல் புரட்டப் பட்டு, கல்லறையின் வாயில் திறந்து இருப்பதைக் கண்டு பெரிதும் ஆச்சரியம் அடைந்தார்கள். ஆகவே சிறிது பயத் துடன் கல்லறைக்குள் நுழைந்தார்கள். அங்கே முழுதும் வெண்ணிற ஆடை தரித்த வாலிபன் இருப்பதைக் கண்டு, அளவற்ற ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். திகிலடைந்து போய் அந்த வாலிபனைப் பார்த்தார்கள்.

அந்த வாலிபன் அந்தப் பெண்மணிகளுக்கு ஆறுதல் சொன்னான். ''பயப்படாதீர்கள்! சிலுவையில் அறையுண்டு மாண்ட இயேசுவைத்தான் நீங்கள் தேடி வந்திருக்கிறீர்கள். தாம் கூறினபடி அவர் உயிர்த்து எழுந்துவிட்டார். இப் போது அவர் இங்கு இல்லை. இதோ இதுதான் அவரை வைத்த இடம். நீங்கள் சென்று அவருடைய சீடர்களிடமும் பீட்டரிடமும் இந்த விவரத்தைச் சொல்லுங்கள். அவர் கலிலேயாவில் இருப்பார் என்றும், அங்கு சென்றால் அவரைக் காணலாம் இயேசு கூறினதைச் சீடர்களுக்கு நினைவுபடுத் துங்கள்'' என்று சொன்னான்.

இதைக் கேட்ட பெண்கள் ஆச்சரியமுற்று, விவரத்தைச் சீடர்களிடம் தெரிவிக்கும் பொருட்டு விரைந்தார்கள். சந்தித்து, சீடர்களிடம், ''இயேசு உயிர்த்து எழுந்துவிட் டார்!'' என்று சொன்னபோது, சீடர்கள் அவர்களின் கூற்றை நம்பவில்லை. ''ஏதோ பெண்களின் பிதற்றல்!'' என்பதாக எண்ணிக்கொண்டு, அவர்கள் சும்மா இருந்துவிட்டனர்.

* * *

பீட்டரிடமும் ஜானிடமும் விவரத்தைத் தெரிவிக்கச் சென்ற மரியா மத்தலேனா, பிறகு கல்லறைக்குத் திரும்பி

குச் சென்றனர், நறுமணப் பொருள்களைச் சாவதானமாக, அவர்கள் வாங்கிக்கொண் டிருந்தனர். மற்றப் பெண்களின் தாமதப் போக்கு மரியா மத்தலேனு என்னும் பெண் மணிக்குப் பிடிக்கவில்லை. இயேசுநாதரின் திருமேனியைத் திரும்பவும் பார்க்க வேண்டும் என்ற விருப்பம் அவளுக்கு மிகுதியாக இருந்தது. ஆகவே, அவள், ''நீங்கள் நறுமணப் பொருள்களை வாங்கிக்கொண்டு வாருங்கள். நான் முன்ன தாகச் செல்லுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, இயேசு நாதரின் கல்லறைக்கு விரைந்தாள்.

கல்லறையை அடைந்ததும், மரியா மத்தலேனு அங்கே கண்ட காட்சி அவளைத் திடுக்கிடச் செய்தது! வாயிலை அடைத்திருந்த கல், புரட்டப்பட்டுக் கிடந்தது. ஆச்சரிய முற்ற அவள், சிறிது பயத்தோடு, கல்லறைக்குள் குனிந்து பார்த்தாள். இயேசுநாதரின் உடலை அங்கே காணேம்! கல்லறை காலியாய்க் கிடந்தது!

யாரைக் கேட்பது? யாரிடம் சொல்வது என்று அவ ளுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு, ஒரு தீர்மானத்துக்கு வந்து, பீட்டரும் ஜானும் இருக்கும் இடத்துக்கு ஓடினள். இயேசுநாதர் உயிர்த்து எழுந்து இருப்பார் என்ற எண்ணம் அவளுக்கு ஏற்படவில்லை. ஆகவே, பீட்டரையும் ஜானையும் சந்தித்து, ''குருவின் திருமேனியை யாரோ திருடிப் போய் விட்டார்கள்; எங்கே வைத்திருக்கிருர்களோ தெரியவில்லை'' என்று கவலையோடு சொன்னுள்.

விவரம் தெரியவந்ததும் சீடர்கள் இருவரும் கல்லறைக்கு விரைந்தார்கள். வந்து பார்த்தபோது, இயேசுவின் உடலை அங்கு காணேம். ஆனல், அவருடைய சடலத்தைச் சுற்றி யிருந்த துணியும் தலையைச் சுற்றியிருந்த துணியும் தனித் தனியே மடித்து வைக்கப்பட்டிருப்பதை அவர்கள் இருவரும் பார்த்தார்கள். என்ன நடந்து இருக்கும் என்பதை அவர் களால் யூகிக்க முடியவில்லை. தாம் சொன்னபடி இயேசு நாதர் உயிர்த்து எழுந்திருப்பார் என்ற எண்ணமும் சீடர்கள் மனத்தில் அப்போது உதயமாக வில்லை. ஆகவே, பீட்டரும் ஜானும் வீடு திரும்பினர்.

பயந்து, பதறியடித்துக்கொண்டு ஊருக்குள் ஓடினார்கள். யூதப் பிரமுகர்களைச் சந்தித்து, கல்லறையில் நடந்த விவரத்தை அவர்களிடம் கூறினார்கள்,

விவரம் தெரியவந்ததும், யூதப் பிரமுகர்கள் முதலில் சிறிது மலைத்தார்கள். எனினும், காவல் வீரர்கள் கூற்றில் உண்மை இருக்கக் கூடும் என்று நம்பினார்கள். உண்மை வெளிப்பட்டு விட்டுவிட்டால் தங்கள் நிலைமை மோசமாகி விடும் என்று பயந்தார்கள்.

ஆகவே எல்லாரும் கூட்டம் கூடி இதுபற்றி யோசித்தார்கள். பொருள் கொடுத்து, ரோமானியக் காவல் வீரர்களைத் தங்கள் சொல்லுவதுபோல் சொல்லும்படி சொன்னார்கள். ''நாங்கள் உறங்கிக்கொண்டிருந்தோம்; இயேசுவின் உடலை யாரோ எடுத்துப் போய்விட்டார்கள்'' என்று சொல்லும்படி யுக்தி சொன்னார்கள்.

படைவீரர்களும் சம்மதித்து, பணத்தை வாங்கிக் கொண்டு திரும்பிவிட்டார்கள்.

''ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. யூதப் பிரமுகர்களின் நடத்தை, இந்தப் பழமொழிக்கு வெகு பொருத்தமாய் இருக்கிறது.

தான் உறங்கும்போது நடந்த நிகழ்ச்சியை, சான்றாகக் கொள்ளும்படி ஒருவன் கூற முன்வந்தால், அதை உலகம் ஏற்குமா?


இந்த உண்மையை, அவசரபுத்தி படைத்த யூதப் பிரமுகர்கள் உணரவில்லை.

• • •

இயேசுநாதரை அடக்கம் செய்வதற்கு வெகு நேரம் இல்லாததால் எல்லாம் அவசர அவசரமாகச் செய்ய வேண்டியதாயிருந்தது. தாங்கள் நினைத்து அளவுக்கு அத்திருச்சடலத்துக்கு மரியாதைகள் செய்ய முடியாமல் போயிற்று. ஆகவே, பெண்மணிகள் கல்லறைக்கு வந்து தக்க மரியாதை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துடன், நகருக்குத் திரும்பினார்கள் அல்லவா? அந்தப் பெண்மணிகள் ஞாயிற்றுக்கிழமை பொழுது புலர்ந்ததும், கடைத்தெருவுக்

விரும்பினால் நீங்கள் காவல்புரியுங்கள்'' என்று கோபமாகச் சொல்லி அனுப்பிவிட்டான்.

ஆகவே, யூதப் பிரமுகர்கள் அங்கிருந்து புறப்பட்டு, இயேசுவின் கல்லறைக்கு வந்தார்கள். கல்லறையை யாரும் திறந்து விடாதபடி அதற்கு முத்திரையிட்டார்கள்; பிறகு சிலரைக்கல்லறை அருகே காவல் வைத்துவிட்டு வீடு திரும்பினார்கள்.



கல்லறைக்குக் காவல் போட முதலில், பிலாத்து உடன்படாதபோதிலும், பிறகு, யூதப் பிரமுகர்களின் வேண்டுகோளுக்குப் பிலாத்து இசைந்தான். சில ரோமானிய வீரர்களை, யூதப் பிரமுகர்களுடன் காவலுக்கு அனுப்பினான்.

சீடர்கள் நம்பவில்லை

யூதப் பிரமுகர்கள் விரும்பியபடியும், பிலாத்தின் கட்டளைக்கு இசைந்தும், ரோமானியக் காவல்வீரர்கள், இயேசுநாதரின் கல்லறையைக் காவல் புரிந்துகொண்டு இருந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமை வைகறை நேரம். அப்போது திடீரென்று நில நடுக்கம் உண்டாயிற்று. மின்னலைப் போன்ற வடிவமும் வெண்பனி போன்ற உடையும் தரித்து இருந்த வானவன் ஒருவன், வானத்திலிருந்து கீழே இறங்கி வந்தான்.

வந்தவன் இயேசுநாதரை அடக்கம் செய்யப்பட்டு இருந்த கல்லறையை அணுகி, அதை மூடியிருந்த பெரிய கல்லை அப்பால் உருட்டிவிட்டான்.

கல்லறைக்குக் காவல் இருந்த ரோமானிய வீரர்கள்

கல்லறைக்குக் காவல்

தங்கள் ஜன்ம விரோதியைத் தொலைத்துவிட்டோம் என்ற களிப்பில், யூத குருமார்கள் தத்தம் இல்லம் திரும்பி, பாஸ்கு விழாவை அதிக மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். ஆயினும் அவர்கள் உள்ளத்தில் ஏதோ ஒரு விதக் கிலி இருந்துகொண்டே இருந்தது. ''இந்த வஞ்சகன் மூன்றும் நாள் உயிர்த்து எழுவதாகச் சொன்னனே; அப்படி உயிர்த்து எழுந்துவிட்டால் என் செய்வது? நிலைமை மேலும் மோச மாகிவிடுமே!'' என்று கவலைப்பட்டார்கள்.

ஆகவே சனிக்கிழமை யன்று காலையில் யூத குருமார் களும் பரிசேயர்களும், ஒன்று சேர்ந்து பிலாத்து மாளிகைக் குச் சென்றார்கள். பிலாத்தைப் பேட்டி கண்டு, ''தான் உயிருடன் இருக்கும் காலத்தில், மூன்றாவது நாளன்று உயிர்த்து எழுவதாக இந்த மோசக்காரன் கூறினன். ஆகவே, அவனை அடக்கம் செய்த கல்லறையை மூன்று நாட்கள்வரை காவல்புரிவது அவசியமாகும். இல்லாது போனால், அவனு டைய சீடர்கள் அவனுடைய உடலைத் தூக்கிப் போய் எங்கா வது வைத்துவிட்டு, அவன் உயிர்த்து எழுந்துவிட்டதாகக் கதை கட்டிவிடுவார்கள். அதனால் விளையும் பயன் முந்தி யதைக் காட்டிலும் அதிக விபரீதமாய் இருக்கும்'' என்று சொல்லி, கல்லறைக்குக் காவல் போடுமாறு வேண் டினார்கள்.

யூதப் பிரமுகர்களின் இந்தப் போக்கு பிலாத்துக்குப் பிடிக்கவில்லை. கல்லறைக்குக் காவல் வைக்கும்படி தன்னை அவர்கள் தூண்டுவது குறித்து பிலாத்து முதலில் கோபம் கொண்டான். குற்றமற்ற ஒருவரை அநியாயமாகக் கொலை செய்ததோடு நிற்காமல், கல்லறையைக் காவல்புரியும் அளவுக்கு, அவர்கள் அச்சமடைந்து இருப்பதைக் கண்டு, பிலாத்துக்கு எரிச்சல் உண்டாயிற்று. இறந்த யூதனின் கல்லறையைக் காப்பது கேலிக் கூத்தாகிவிடும் என்று நினைத்த அவன், ''உங்களிடம் படையினர் இருக்கின்றனர்.

போதே, விண்ணிலே செல்லும் மேகத்தினிடையே புகுந்து இயேசுநாதர் மறைந்தருளினார்.

இதுவரை மக்களுக்கு வழிகாட்டி, படாதபாடுகள் பட்ட இயேசுநாதரின் பூத உடம்பு இப்பொழுது வான் நாட்டில் உள்ளது. ஆயினும் அவருடைய புகழும் போதனைகளும் மக்களுக்குஇப்பொழுதும் வழிகாட்டிக்கொண்டிருக்கின்றன.

உலகம் உள்ள மட்டும் இயேசுநாதர் செய்த தியாகமும் போதனைகளும் அவர் பட்ட பாடுகளும் மக்கள் மனதை விட்டு அகலா. அவர் செய்த போதனைகளும் அவருடைய புகழும் தியாகமும் ''ஓங்குக! ஓங்குக!'' என்று நாமும் வாழ்த்துவோமாக!

முற்றும்

